# வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

301.2
ஈழத்
SL/PR

ஈழத்துப்பூராடனார்

# வதனமார் வழிபாடு
# ஒரு மதிப்பீடு

கூட்டு ஆக்கம்
ஈழத்துப் பூராடனார்
இலக்கியமணி க,தா.செல்வராசகோபால்
மு.நடேசானந்தம் B. A

பதிப்புக் குழு
அன்புமணி இரா, நாகலிங்கம்
செல்வி க.தங்கேஸ்வரி
சக்திசாந்தன்

2000

கனடிய மட்டக்களப்பு சமூகத்தின் ஆதரவிலும்
மட்டக்களப்பு அன்பு வெளியீட்டு ஆதரவிலும்

கனடிய ஜீவா பதிப்பகத்தின்

நிழல் வெளியீடு.

## பதிப்புத் தகவல்கள்;


**நூலாசிரியர்கள்.**
ஈழத்துப்பூராடனார் - இலக்கியமணி
க.தா.செல்வராசகோபால் 1928
மு.நடேசானந்தம். B.A

பதிப்புக்குழு
அன்புமணி இரா.நாகலிங்கம்
செல்வி க,தங்கேஸ்வரி
சக்திசாந்தன்

1. நூற்பெயர்;" வதனமார் வழிபாடு - ஒரு மதிப்பீடு "
2. பகுதி; மட்டக்களப்பு மண்வாசனை
3. பதிப்பாசிரியர்; ஈழத்துப்பூராடனார்
4. பதிப்பகம்; ஜீவா பதிப்பகம் (இலங்கை - கனடா)
5. அச்சிட்டது; றிப்ளக்ஸ் அச்சகம் - தொரன்ரோ
6. வெளியீட்டிலக்கம் ; 206.
7. வெளியிட்ட திகதி; புரட்டாதித் திங்கள் 2000.
8. விலை; $ 20கனேடிய டாலர்கள்
9. அளவு - பக்கங்கள்; டிமை எட்டிலொன்று 40.
10. அச்சமைப்பு; மின்கணனித் தமிழ்
11. அச்செழுத்து; புத்தகம் 10, அலகு ரோமன் எழுத்துகள்
12. அச்சு நுட்பங்கள்; இதயம் சகோதரர்கள் - கனடா

வியாபார விசாரணைகளுக்கு;
REFLEX PRINTING
#3. 1292 Sherwood Mills , MISSISSAUGA,Ont.
Canada L5V 1S6


---------



## நினைவு கூர்கிறோம்.

*முதன்முதலில வதனமார் வழிபாடு பற்றிய ஒரு சிறு தகவலை இலங்கை வானொலியில ஒலிபரப்பியவர்
*விபுலானந்த அடிகளாரின் வரலாற்றை முதன்முதலில நூலுருவாக்கியவர்
*அவரது பல கட்டுரைகளைத் தொகுத்து பல தொகுதிகளாக வெளியிட்டவர்
*தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் இடமபெற்ற கட்டரையாளர்
*மட்டக்களப்பு மண்ணின் கலை வளங்களைப் பல கட்டுரைகளால் பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளியிட்டவர்
*பல நூல்களின் ஆசிரியர்
தமிழக வெளியீட்டாளர்களின் மதிப்புக்குரியவர்
எனும்புகழுக்குரிய



**அமரர் அருட் செல்வநாயகம் அவர்களை**
நினைவு கூர்கிறோம்

**பதிப்பகத்தார்.**


# பழைய தமிழ் எழுத்துக்களா?
# அதுவும் இந்த 2000 ஆண்டில்!

இந்த நூலினைக் கையில் எடுத்தவுடன் நீங்கள் ஒவ்வொருவரும் கேட்கும் கேள்வி இதுவாகத்தான் இருக்கும் என்பது எங்கள் நம்பிக்கை. தமிழர் வாழும் உலகின் பல பாகங்களிலும் சீர்திருத்தப்பட்ட தமிழ் எழுத்துக்கள்தானே பயன்படுத்தப்படுகின்றன. நாடுகளும், அரசும், மக்களும் புதிய சீர்திருத்தப்பட்ட எழுத்தை உபயோகித்துத்தானே எழுதுகிறார்கள், வாசிக்கிறார்கள், நூல்கள், பத்திரிகைகள், அறிவித்தல்கள், அழைப்பிதழ்கள் , வர்த்தக விளம்பரங்கள் ஆதியவற்றை அச்சிடுகிறார்கள்! அப்படியிருக்க நீங்கள் மட்டும் ஏன் பழைய எழுத்துகளைப் பாவிக்கும் கட்டுப்பெட்டிகளாக இருக்கிறீர்கள்? என்று நீங்கள் மாத்திரமல்ல, எங்கள் வெளியீடுகளைக் காண்பவர் யாவரும் கேட்கிறார்கள்.

மின்கணனியில் தமிழ் எழுத்துக்களை நெறிப்படுத்தி உலகின் முதல் முதலில் அறிமுகப்படுத்தியும் தமிழ் அச்சமைப்புச் செய்தும், அதன் மூலம் நூல்கள் பத்திரிகைகள் என்பவற்றை அச்சிட்டவர்கள் நாங்கள். அதுமட்டுமல்ல அமரிக்கக் கண்டத்தில் கனடா தேசத்தில் தொறன்ரோ நகரில் றிப்ளக்ஸ் பிரிண்டர்ஸ் எனும் பெயரில் தமிழில் அதுவும் மின்கணனித் தமிழில் அச்சுசிடும் அச்சகத்தை நிறுவிய பெருமையும் எங்களுக்குண்டு. அன்றுதொட்டு இற்றைவரை சீர்தி ருத்தத்தை ஒதுக்கிப் பழைய எழுத்துகளிலேயே அச்சிட்டு வருகிறோம். காரணம் சீர்திருத்தம் ஒன்றினால். காலம், இடம், முயற்சி என்பன சேமிக்கப்படல் வேண்டும். இந்த மூன்று காரியங்களையும் சீர்திருத்த எழுத்துகளால் செய்ய முடியாது போயிற்று. மற்றது மின்கணனி திருத்தம் செய்யப்பட்ட பழைய எழுத்துகளை ஏற்றுக்கொள்ளாது. அதனால் ஒரே தொடுகையால் அந்தக் கூட்டு எழுத்துகளை அச்சிடமுடியாதென்று அதற்கு ஒரு காரணம் சொன்னார்கள். அது எங்களால் முடிகிறது மட்டுமல்ல எந்தவொரு மின்கணியாலும் பழைய எழுத்துகளால் அச்சமைப்புச் செய்ய முடிகிறது. இப்படி இருக்க ஏன் சீர்திருத்தமென்ற அரசியல் லாபம் கருதுவோர்கள் கொண்டு வந்த பயனற்ற கருத்தை நாம் பின்பற்ற வேண்டும் என்பதை நிலைநாட்டவே நாங்கள் 2000 ஆண்டிலும் பழைய எழுத்துகளைக் கைவிடாமல் காத்து வருகிறோம். மின்கணனிக் கருவிகளே பழைய எழுத்துகளை விரைவில் கேட்கும் காலம் வெகுதூரமில்லை. அப்போது பழைய எழுத்துக்கள் அவசியப்படும்.. இது எங்கள் உறுதியான நம்பிக்கை

**----பதிப்பகத்தார்.**





புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் முழு உருவச் சிலை 22.1999ல் (மட்டக்களப்பு) கல்வித் திணைக்களச் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது. சிலை செய்வதற்கான ரூபா 25000 அன்பளிப்புச் செய்தவர் லவர்மணியின் மாணவர் , இலக்கியமணி க.தா.செல்வராசகோபால் - கனடா

- தகவல் புலவர்மணி உருவச் சிலைதிறப்பு விழா மலர்

# பதிப்பகத்தார் பகர்வன.

மட்டக்களப்பு மண்ணின் வளத்தில் ஒரு தனித்துவம் உண்டு. ஆரியமாயையின் சாயல்படியாத பழக்க வழக்கங்கள், கலாச்சாரங்கள், சமயக் கொள்கைகள் என்பதுதான் அந்தத் தனித்துவத்தின் முக்கிய கூறுகள். எத்தொழில் புரிபவர்களாக இருந்தாலும் அத்தொழிலின் அடிப் படையில ஆக்கப்பட்ட குலமாக இருப்பினும் அவர்களுக்கு மட்டக் களப்பில் மனித நேய அடிப்படையில் அமைந்த சுயமரியாதைக்கு இடமுண்டு. அவர்களைத் தீண்டாமை எனும் அரக்கன் இங்கு சாடுவது மிகமிகக் குறைவு.

இப்படிப்பட்ட மண்ணில் கால்நடை பேணும் தொழில் ஒரு உன்னத இடத்தில் இருந்து வந்துள்ளது. எருதும் ஏரும் கொண்டு செய்யுந் தொழிலாக வேழாண்மைச் செய்கை ஒருகாலத்தில் இருந்தது. அப்போது வேழாண்மை வயற் சொந்தக்காரர்களான போடிமார் தமக்கு வேண்டிய எருமைகளையும் பசுக்களையும் காடு சார்ந்த இடங்களில் பட்டி களை வைத்து வளர்ந்து வந்தனர். அப்படியான பட்டிகள் கமச்செய் கைக்கு வேண்டிய கால்நடைகளையும் பாலுணவுகளையும் மக்களுக்கு தந்து வந்தது.

அப்படிப்பட்ட பட்டிக்களும் அதனைப் பேணிக் காத்து வந்த பட்டிக்காரர்களும் எவ்வாறு தோன்றினார்கள் எவ்வித மாற்றங்களுக்குள் ஆளாகி இன்று பாற்பண்ணைக்காரர்களாகினர் எனும் ஒரு வரலாற்றை எடுத்துக் கூறும் இந்த நூல் ஒருபுதுமைப் படைப்பு. தொழில்சார்ந்த ஒரு முனையில் இருந்து மட்டக்களப்பு மண்ணின் மக்களின் வாழ்க்கையை எடுத்து ஆராயும் நூலாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு முயற் சியில் நாங்களும் ஈடுபடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**எட்வேட் இதயச் சந்திரா**

*நிழல் வெளியீட்டாளர்*

*மிசிஸ்சாகுவா - கனடா 2000.*



ஈழத்துப் பூராடனாரின் இல்ல நூலகம் அமரர் ஜோசப் பாலசிங்க நினைவு ஆய்வு நூலகமாக 16.1.200ல் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.




அந்த நூலகத்தின் புத்தக வரிசைகளின் ஒரு பக்கம்



# உள்ளடக்கம்.

1. முகப்புத்தாள் 1
2. பதிப்புத் தகவல்கள் 2
3. நினைவு கூர்கிறோம் 3
4. பழைய தமிழ் எழுத்துக்களா அதுவும் இந்த 2000ல் 4
5. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் உருவச் சிலை 5
6. பதிப்பகத்தார் பகர்வன 6
7. அமரர் ஜோசப் பாலசிங்கம் நினைவு ஆய்வு நூலகம் 7
8. உள்ளடக்கம் 8
9. நூலாசிரியர் உரை 9
10. ஏட்டுச் சுவடிகளைத் திரட்டல் 10
11. தேற்றாத்தீவு மகா வித்தியாலய நீர்வழங்கல் திட்டம் 12
12. கூட்டுப் படைப்பாளியின் குறிப்புகள் 17
13. புலவர்மணி சிலைக்கு முன்னால் நூற்றாண்டு விழா 23
14. கனடிய மட்டக்களப்பு சமூக வெளியீட்டுரை 24
15 அமரர் ஜோ பாலசிங்க நினைவு நூலகத் திறப்பு விழா 28
16. மட்டக்களப்பு அன்பு வெளியீட்டு ஆதரவுரை 22
17. மட்டக்களப்பு வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு 29
18. நூல் அறிமுகம் 30
19. வதனமார் வழிபாட்டு இலக்கியங்கள் 33
20. 1 - வதனமார் யானைகட்டு அகவல் 34
21. 2- வதனமார் குழுமாடு கட்டு அகவல் 37
22. 3 - வதனமார் குழுமாடு கட்டுக் காவியம் 42
23. 4 - வதனமார் தேன்வெட்டுக் காவியம் 47
24. 5 - வதனமார் ஊர் சுற்றுக் காவியம் 53
25. 6 -வதனமார் பொங்கல் வழிபாட்டுக் காவியம் 57
26. பட்டிக்காரர்களின் வதனமார்பற்றிய நம்பிக்கை 62
27. முடிவுரை 67
28. சொல் விளக்கம் 71



# நூலாசிரியர் உரை.

இலங்கை வானொலியும் தினகரன் பத்திரிகையும் மண்வாசனைக் கவிகளுக்கும் கட்டுரைகளுக்கும் போதிய இடமளித்த காலத்தில் மட்டக் களப்பின் பல எழுத்தாளர்கள் இந்த முயற்சிக்குப பக்கபலமளிக்கும் நோக்கில் தங்கள் எழுத்தாற்றலை இத்துறையில் செலவிட்டனர். அவற்றின் மூலமாக பட்டி தொட்டிகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த பல இலக்கியங்களும் சுவையான சம்பவங்களும் வெளிக்கொணரப்பட்டன. பல புதிய படைப்பாளிகளும் தோற்றினர். அவற்றில் ஒன்றாக பிரபல எழுத்தாளர், நூலாசிரியர், சிறப்பாக விபுலானந்த அடிகளாரின் ஆக்கங் களைப் பல நூல்களாக பதிப்பித்த பதிப்பாசிரியர் குருமண்வெளி அருட் செல்வநாயகம் அவர்கள் 'மட்டக்களப்பின் வழிபாட்டுப் பாடல்கள்" என்ற தலைப்பில் களுவாஞ்சிக்குடி கவி,கனகசபை அவர்களுடன் இணைந்து ஒரு நிகழ்ச்சியை இலங்கை வானொலி - கிராமிய சஞ்சிகையில் ஒலி பரப்பினார் அதில் ஒரு சில நிமிடங்கள் மட்டும் இடம்பெற்ற வதனமார் சாவியம் என்ற பாடல்கள் எந்தன் கவனத்தைக் கவர்ந்தது.

அதன் பின்னர் அதையிட்டு விபரமாக ஒரு நிகழ்ச்சி தயாரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மட்டக்களப்பில் பட்டிகளுக்குச் சொந்தக்காரர்களான போடிமாரையும் பட்டிக்காரர்களையும் வதனமார் சடங்கு செய்யும் பூசாரிகளான சில கட்டாரிமார்களையும் காணுந்தோறும் தகவல்களைத் திரட்டினேன். இதன் போது வதனமார் சடங்கு என்னும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை 1957ம் ஆண்டு ஒலிபரப்பினேன். அது ஏறக் குறைய 15 நிமிடங்கள் கொண்டதாக அமைந்தது. ஒரு காவியத்தைப் படிக்கவும் அதற்குரிய முகவுரையை எடுத்துச் சொல்லவுமே அந்த நேரம் என்னை அனுமதித்து. அதன்பின் அதில் உள்ள ஈடுபாட்டால் செல்லு மிடங்களிலும் எனது அச்சகத்துக்கு வரும் வாடிக்கைக்காரர்களிடமு மிருந்து மேலதிக தகவல்களைச் சேகரிக்கலானேன். 1984ம் ஆண்டி லேயே நான் தாயகத்தைவிட்டு கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்து விட்டேன். நான் தேடி வைத்த தகவல்கள் என்னைக் கைவிட்டுப் போய் விட்டன என்றே நினைத்தேன்.

பதினாறு வருடங்களுக்குப் பின்னர் நான் தாயத்துக்குச் சென்று 100 நாட்களே தங்கியிருக்கக் கூடியதாக இருந்தது. அப்போது நான் விட்டுச் சென்ற பல குறிப்புப் புத்தகங்களை மீண்டும் காணக்கூடிய

நூலகத்தை பொது நூலகமாக்கும் பிரகடனத்தை ஈழத்துப் பூராடனார் வாசித்தளிக்கிறார்.



மட்டக்களப்பு கலாச்சாரச் சபைக்கு அவர் பல ஏட்டுச் சுவடிகளை ஊர்ஊராகச் சென்று பெற்றுக்கொடுத்தார். அதில் பாண்டிருப்பில் வசித்த செட்டிபாளையம் புலவர் கணபதிப்பிள்ளையின் மகன் அமரர்திரு செல்வநாயகம்



அதிபர் அவர்களின் இல்லத்தில் ஏட்டுப் பிரதிகளை அவரது மனைவியிடம் இருந்து பெற்று கலாச்சார உத்தியோகத்தர்களான அன்புமணி, இரா நாகலிங்கம், செல்வி தங்கேஸ்வரி அவர்களிடம் ஒப்படைக்கிறார்.



வாய்ப்பு வாய்த்தது. அதில் வதனமார் வழிபாடு சம்பந்தப்பட்ட குறிப்புகளும் தகவல்களும இருந்தன. நாட்டில் இருந்த பயங்கர சூழ்நிலையில் என்றால் சிலரைச் சந்தித்து மேலதிக தகவல்களைச் சேர்க்க முடியாதிருந்தது. ஆனாலும் நான் சிறுபிள்ளையாக இருக்கும்போதே அறிமுகமான ஒரு துடிப்பும் ஆற்றலும் உள்ள வாலிபனிடம் அந்தப் பொறுப்பையும் அதுபோன்ற தகவல்களைத் தேடி எடுக்கும் பொறுப்பையும் ஒப்படைத்து விட்டு வந்ததேன். அவர் தனக்கிட்ட தமிழ்ப் பணியை நல்லபடியாகச் செய்து வருகிறார். அவற்றுள் மட்டக்களப்பு மாநில வசந்தன் கவிகள், வதனமார் காவியங்கள் என்பன அடங்கும். அதில் ஒன்று "மட்டக்களப்பு மாநிலத்தில் வசந்தன் கூத்து ஒரு நோக்கு" என்ற நூலாக வெளிவந்தது. அதில் இவர் திரட்டாசிரியராய் முயன்றார். இப்-போது "வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு" என்ற நூலிற்குக் கூட்டாசிரியாகிறார். இவரது தமிழ்ப் பணி ஈடுபாட்டிற்கு நன்றிகள். இம்முயற்சியில் ஈடுபட்டு வரும் வாலிபர். தேற்றாத்தீவு மு.நடேசானந்தம் B.A என்பவராவார் இவர் கல்வித் துறையில் பணிபுரிகிறார்.

*1948*ம் ஆண்டளவில் மண்டூருக்கு அருகாமையில் இருந்த ஒரு பட்டிக்குச் செல்லவேண்டி ஏற்பட்டபோது அங்கு கண்ட காட்சி மிகவும் பரிதாபத்துக்குரியதாக இருந்தது. பரட்டைத் தலை, இடுப்பில்மட்டும் கோவணம், சாம்பல் பூத்த மேனி காவிப்பற்கள் ஆதியவற்றுடன் பட்டிக்காரனும் அவனின் மகனும் நின்றிருந்தார்கள், பட்டிக்கு ஒரு பக்கத்தில் சாணம் மலைபோல் குவிந்திருந்தது. ஒரே கால்நடை நெடி. பட்டிக்குப் பக்கத்தில் பரண்வடிவில் அமைக்கப்பட்ட வாழிடம். காட்டுக்கு மத்தியில் இவர்கள் பயத்துடனும் பீதியுடனும் தனித்த சூழ்நிலையில் வாழ்ந்தனர்.. இவர்களின் உடலமைப்பின் அளவுக்கு அதிகமாக வயிற்றின் சுற்று பெருத்திருந்தது. அது தொந்தியல்ல, வயிற்றுக் கட்டியாகவே இருந்திருக்கலாம். ஏனெனில் இவர்கள் அடிக்கடி மலேரியாக் காய்ச்சலாலும் அசுத்தமான குடிநீர் அருந்துவதால் ஏற்படும் பாண்டு ரோகத்திற்கு ஆளாவதாலும் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஐந்தாவது மாநாடு மதுரையில் நடப்பதற்கு ஏர்கோல் விழாவாக அதன் மட்டக்களப்புக் கிளை ஒரு மாநாட்டை நடத்திற்று. அவ்விழாவிற்காகப் பெருமளவில் தயிரும் பாலும் நெய்யும் பெறும் ஏற்பாடு செய்வதற்காக அதன் உணவு வழங்கும் குழுவுடன் நான் *1978*ல் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே கொக்கட்டிச் சோலைக்கண்மையில் உள்ள ஒரு பட்டிக்கு சென்றிருந்தோம். அப்போது நான் அங்கு கண்ட பட்டியின் அமைப்பும் பட்டிக்காரரின் வாழ்க்கை முறையும் நினைக்க முடியாத அளவுக்கு மாற்றம் அடைந்திருந்தது. பட்டி ஒரு காட்டுப் பிரதேசத்தில் அமைந்திருந்தாலும் வழக்கமாக அங்கே மலை போல குவித்து வைக்கப்பட்டிருக்கும் சாணக் குவியலைக் காணமுடியவில்லை. அதற்குப் பதிலாக அவைகளை சாக்குகளில் கட்டி மூடைகளாக

பதினாறு வருடங்களின் பின் தாயகம் திரும்பிய ஈழத்துப் பூராடனார், தனது
மனைவி பியற்றிஸ் பசுபதிப்பிள்ளை செல்வராசகோபால் ஆசிரியை
தனது பிறந்த கிராமமாகிய தேற்றாத்தீவு றோ.க.மி பாடசாலையில்
0 - 0 1949 - 31.12.83 வரையிலான காலகட்டத்தில் 35 வருடம் தொடர்ந்து
சேவை செய்த நினைவாகத் தன்னை வளர்த்து உயர்வுபெறச் செய்த



அமரர் திரு.சி.தா.வேல்முருகு அதிபரின் பேரில்
தனது இளைப்பாற்று ஊதியத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாவில் நிறுவிய
குடிநீர் வழங்கும் திட்டத்தையும் 26.1.2000ல் நிறைவு செய்து வைத்தார்.



அடுக்கி வைத்திருந்தனர். அப்போதுதான் இவை எருவுக்காக ஊர்கள் தோறும் எடுத்துச் சென்று விற்கப்படுவதாக அறிந்தேன். அதுபோலவே பால் சேகரிக்க மண்பாண்டங்கள் இருப்பதற்குப் பதிலாக அலுமினியத் தாலான பாத்தகரங்கள் இருந்தன. காலையில் கறக்கப்படும் பாலைத் துவிசக்கரவண்டியில் எடுத்துச் சென்று அருகாமையில் அமைந்துள்ள பால் சபையின் சேகரிக்கும் நிலையங்களில் ஒப்படைத்து வருவார்கள்.

காவற்பரண் இருந்தாலும் பட்டியின் பக்கத்தில் ஒரு மண்வீடும் கிணறும் சுற்றிவர வேலியிடப்பட்டு பட்டிக்காரர்களின் வதிவிடமாக அமைந்திருந்தன. இதனை இப்போது பட்டி என்று சொல்லாமல் வாடி என்று அழைத்தனர். அதனைச் சுற்றி தென்னை மரங்களும், தோடை, எலுமிச்சை, பலா, வாழை போன்ற கனிதரும் தருக்களும் நின்றன. வீட்டின் ஓரமாக காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்தன. பட்டிக்காரனின் மனைவி மக்களின்: உடை களிலும் தோற்றத்திலும் ஒரு சாதாரண கிராமவாசிக்குரிய அம்சங்கள் பொலிந்தன. பிரயாண வசதிக்கு துவிசக்கர வண்டிலும் இரட்டை மாட்டுக் கட்டை வண்டிலும் முன்றிலில் நின்றன. பட்டிக்காரர்கள் பாற்பண்ணைக்காரர்கள் ஆகிவிட்ட காட்சி என்னைப் புல்லரிக்க வைத்தது.

அதற்கு மேலாகப் பட்டிகளின் உரிமையில் அவர்களுக்குப் போதிய பங்குரிமையும் இருந்தமை மந்தைத் தொழிலின் வளர்ச்சியையும் உறுதிப்பாட்டு நிலையையும் எடுத்துக்காட்டிற்று. ஆயினும் வதனமார் வழிபாட்டில் இருக்கும் நம்பிக்கை அவர்களுக்கு அதிகரித்து இருந்ததே தவிர குறையவில்லை என்பதை நடந்து முடிந்த சடங்கின்போது பூசையில் வைத்த வேப்பம் பத்திரம், கமுகம் பாளை, தாமரைப் பூ என்பவை உலர்ந்த நிலையில் வீட்டின் ; முன்புற; உட்பக்கக் கூரையில சொருகப்பட்டிருந்தமை துலக்கிற்று.

முன்பெல்லாம் பட்டிகளின் சொந்தக்கார போடிமார் சென்று நடத்தி வந்த வதனமார் சடங்கு, இப்போது அந்தப் பட்டிகள் அமைந் துள்ள இடத்தை சூழ்ந்த இடமக்களின் ஒரு பொதுவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறதுபொது மக்களும், குறைந்த அளவில் கால் நடை வைத்திருப்போர்களும் இந்தச் சடங்கில் கலந்துகொண்டு வதனமாரை வழிபடலாயினர்.

இந்த மாற்றத்தையும் மறைந்து அருகிப்போன பட்டிக்காரர் பரம்பரையும், பட்டிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த போடிமார் களையும் நான் சேகரித்து வைத்த வதனமார்பற்றிய செய்திகளையும் இணைத்து இந்த நூலை ஆக்குவதால் மட்டக்களப்பில் மறைந்துபோன ஒரு வரலாற்றை இந்த நிலையிலாவது ஆவணப்படுத்தி வருங்காலச் சந்ததியினருக்கு விட்டு வைக்கலாம் என்று எண்ணியே இந்தச் சிறு நூலை படைக்க ஆரம்பித்தேன்.

இதற்கு வேண்டிய தகவல்களையும் காவியங்களையும் நான் *1956ல்* இருந்த் சேகரிக்கத் தொடங்கியபோது, உதவியவர்கள் பலர், அவற்றுள் குறிப்பிடக் கூடியவர்களின் பெயர்களை நான் இப்போது ஞாப கத்திற்கொள்ள முடியாவிட்டாலும்,தேற்றுத்தீவு சண்முகம் சாத்திரியார், கழுதாவளை சி.தங்கராசா அண்ணாவியார், செட்டிபாளையம், கு.கந்தப்பன், மாங்காடு அமரர்கள் திரு.க வேலாயுதம், திரு.க.கணபதிப்பிள்ளை ஆசிரி யர்கள், கிரான்குளம் திரு குழந்தை, . வீ.பெரியதம்பி, . ஆரையம்பதி அமரர் இளையதம்பி தலைமையாசிரியர், குருமண்வெளி, திரு முருகுப் பிள்ளை, அமரர்கள். வே.பூபாலரெத்தினம் ஆசிரியர், திரு வராக முத்து சாத்திரியார், நிந்தவூர் கே.எல்.அபூபக்கர் ஆசிரியர், சம்மாந்துறை அமரர் கலந்தர்லெப்பை ஆசிரியர். கொம்மாதுறை அமரர் கே.ராஜகோபால் ஆசி ரியர் களுவாஞ்சிகுடி அமரர் கவி. கனகசபை, பழுகாமம் கே.விநாயக மூர்த்தி இளைப்பாறிய அதிபர், அமரர் செட்டிபாளையம் க.வ.செல்வநாயகம் மண்டூர் அமரர் திரு செல்வநாயகம் ஆசிரியர், மண்டூர்க் கோட்டைமுனை அமரர் திரு நா. தம்பிப்பிள்ளை ஆசிரியர்..என்பவர்கள் என் மனதில் நிற்கின்றனர்.

நான் பாடசாலை மாணவனுய் இருந்த காலத்தில் எங்களின் வீட்டருகில ஒரு பட்டிக்காரர் வசித்து வந்தார். அவர் எங்களது உற வினர். இவரை வருடத்தில் சில நாட்கள்தான் வீட்டில காணமுடியும். அதுவும் தனது இல்லத்தில் நடைபெறும் நல்ல காரியங்களின் போதும், சித்திரை வருடப் பிறப்பு. தைப்பொங்கல் போன்ற வருடாந்த கொண்டாட் டங்களிலும், பக்கத்தில் நடக்கும் கோயிற் திருவிழாக் காலத்திலும்தான் இவர் ஊரில் நடமாடுவார். ஏனைய காலத்தில் பட்டியிலதான் இவரது சீவியம் இருக்கும். அங்கிருந்து வரும்போது தயிர் முட்டிகளைக் காத்தா டியில் வைத்துக் காவிக்கொண்டு வருவார். அதுபோலவே திரும்பிப் போகும்போது சாப்பாட்டுக்குரிய அரிசி, தேங்காய். எண்ணெய், மசாலை வகைகள் என்பவற்றை உடனெடுத்துச் செல்வார். இதை இங்கு சொல்ல வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இதன் மூலம் இரு காரியங் களை நாம் அறிந்துகொள்ளலாம். ஒன்று பட்டிக்காரர்கள் என்றொரு இனமோ குடியோ இருந்ததில்லை. வயற் சொந்தக்காரர்களின் இனசனத் தாரே பட்டிக்காரர்களாக்கப்படுவார்கள். என்பது. இரண்டாவது; இதன் மூலம் அவர்கள் எவ்வளவு தூரம் மக்கள் சமுதாயத்திலிருந்து தனிமைப் பட்டிருந்தனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதுபற்றிய மேலதிக தகவல்களை மதிப்பீடு எனும் பகுதியில் காணலாம். இத்தகைய வரலாற்று அடையாளங்கள் வருங்காலச் சந்ததியினருக்கு எடுத்து முன்வைக்கப்படும் நோக்கில் முயற்சிகளில் படைப்பாளிகள் ஈடுபட வேண்டும். அதைவிடுத்து சமூகத்தின் தேவை களுக்கு ஒவ்வாத, வடமொழிச் சொற்கள் தொண்ணூறு வீதம் தப்புந் தவறுமாகக் கலந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளில ஈடுபடு வதைத் தவிர்க்க வேண்டும்.



அண்மையில் நான் தாயகஞ் சென்றிருந்தபோது ஒரு நூலைக் கண்டேன். அது ஒரு பழைய ஏட்டுப்பிரதியின் அச்சுப் பதிவு என்று சொல்லிக் கொண்டார்கள், பதிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ஒரே ஒரு பிரதிதான் என்று பதிப்புரையில் சொல்லப்பட்டிருந்தது. . ஒப்பிட்டுப் பார்க்கவோ உண்மை நிலை காணவோ வேறு பிரதிகள் இல்லாத நிலையில் நூல் வெளிவந்தது. ஒரு மரம் தோப்பல்ல. குறைந்தது இரண்டு மூன்று மரங்களாவது இருந்தால்தான் தனி மரங்கள் தோப்பாகும் நிலை உண்டாகும். கையில் கிடைத்த ஒரே ஒரு பிரதியைக் கொண்டு நூலைத் துணிவது தக்கதொரு முயற்சியாகாது.

இந்த நூல் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் அண்மையில்தான் நான் வசித்து வந்தேன். வசித்து வந்தேன் எனபதிலும் பார்க்க அந்தப் பகு தியில் உள்ள அறிஞர்களைப் பற்றி நான் நன்கு அறிவேன். அதில் ஒருவர் கழுதாவளை திருநீற்று கேணியில் வசித்த வீரபத்திரன் சாமியார் என்பவர். அவரது தமிழறிவு இலக்கண இலக்கிய அத்திவாரம் கொண்டது. வீரபத்திரன் சுவாமிகளின் தோத்திரத் திரட்டுகள் இரண்டை அச்சிட்டு வெளியிட்டுள்ளேன். இதற்காக நான் இடைக்கிடை அவரது குடி லுக்குச் சென்று உரையாடுவது வழக்கம். அப்படிச் செல்லுந் தருணங் களில் அங்கு அவர் அவித்த வள்ளிக் கிழங்கைத் தந்து உபசரித்தது என்னல் மறக்க முடியாததொன்று. அப்போது அவர் வேதாந்த சூரியன், வேதாந்த பிரம்ம ரகசியம். வேதாந்த பாஸ்கரன் போன்ற நூல்களை வைத்து தானறிந்த தத்துவங்களை ஓலைப் பிரதியில் எழுதிக் கொண்டிருப் பதை கண்டுள்ளேன்.

அதே பிரதி அவரது மரணத்தின் பின்னர் இந்தி யாவிலிருந்து வந்து இங்கு வசித்த ஒரு யோகியால் செய்யப்பட்டது என்ற கணிப்பில் ஓலை சுவடி நூல் வடிவம் பெற்றது கண்டு திகைத்துப் போனேன். அப்படியாக *1945*க்குப் பிறகு எநத யோகியும் இப்பகுதியில் வந்து வாழ்ந்ததில்லை. ஆனல் ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்த கிரி என்ற் ஒருவரும் சாம்பல் சாமி என்று ஒருவரும் இங்கு வாழ்ந்தனர். அவர் களுடனும் நான் ஊடாடியுள்ளேன். ஆனல் அவர்கள் இத்தகைய முயற் சியில ஈடுபட்ட தாக நானறியேன்.

அந்த நூலையும் நான் முன்னர் குறிப்பிட்டவை போன்ற நூல் களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தத் தில்லு முல்லு தெற்றெனப் புலனுகும். இதையும் நான்இங்கு எடுத்துரைக்க வேண்டியுள்ளது. காரணம் இப்படியான இலக்கிய மோசடிகள் இனங்கண்டு தவிர்க்கப் படல் வேண்டும் என்பதே ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு ஏதுகோலாக இருக்கும். அதுமட்டுமல்ல இனி ஏட்டுப் பிரதிகளை நூலு ருவாக்க முன்வருபவர்களுக்கும் பதிப்பாசிரியர்களிக்கும் எசரிக்கையா கவும் இருக்க வேண்டுமென்று அவாவுகிறேன்

இந்த விசயம் நான் எடுத்துக்கொண்ட பணியுடன் சம்பந்தப் பட்டதல்ல. எனினும் இத்தகைய ஆள்மாறாட்டங்களும் அவசர முடிவு களும் ஓலைச் சுவடிகளைப் பதிப்பிக்கும் விசயத்தில் இனிமேலாவது இடம்பெறக் கூடாது என எதிர்ப்பார்க்கின்றேன், இலங்கையை விட்டு வெளிக்கிழம்பும்போது ஏறக்குறைய என்னால் மட்டகளப்பு மாநிலத்தில் சேகரிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஏட்டுப் பிரதிகளை விட்டு வந்தேன். அவற்றுள் அம்மானை, இலக்கியம், மாந்திரிகம், கூத்து, வைத்தியம் முதலியன அடங்கும். அப்படி இருந்தும் அவற்றுள் கபோத காதை, இர ணிய சம்ஹார அம்மானை எனும் இரண்டே இரண்டு பிரதிகளை மட்டும் என்னால் அச்சுருக் கொடுக்க முடிந்தது. அவற்றில் பல பிரதிகளைச் சேர்த்த பிறகே நூலின் முழுமையைத் துணியும் நிலை எனக்கு ஏற்பட்டது. ஏனையவைகளில் ஆய்வுக்கும் ஒப்பீடு செய்வதற்கும் போதிய பிரதிகள் சேரும்வரையும காத்திருந்தேன். ஆனால் இப்போது அவைகள் என் இல்ல நூலகத்தில் இல்லாதிருப்பதையிட்டு கவலைப்படுகிறேன். அதே தருணம் முழுமையான ஆய்வு செய்யாமல் தமிழுக்கு பிழையான தகவல் களைத் தந்துவிடவில்லை என்ற ஆனந்தம் என்மனதில் தவழ்கிறது.

இங்கே எனது மதிப்பீட்டுக்கு ஆதாரமான தகவல்கள், வாய்வழி யாகவும் கொப்பிகளில் எழுதி வைத்தவற்றையும அடிப்படையாகக் கொண்டும் பெறப்பட்டவை. நான் சேகரித்து வைத்திருந்த தகவல்கள் சரி யானவை எனும் துணிவுக்கு நான் வரத்தக்தாக 'தேரோட்டம்' எனும் நூலில் இருந்து கூட்டாசிரியர் திரு மு.நடேசானந்தம் அவர்கள் தகவல் களைத் திரட்டி அனுப்பி இருந்தார்.அவரால் இந்த நூல் முழுமை பெறுகிறது. நன்றி.

**ஈழத்துப்பூராடனார்**

*மிசிஸ்சாகுவா - கனடா 2000.*



# கூட்டுப் படைப்பாளியின் குறிப்புகள்.

குருவித் தலையில் பனம்பழம் என்பது என்னளவில் கண்கூடா னது. ஈழத்துப்பூராடனார் அவர்களால் அவ்வளவு பாரச் சுமை என்மேல் சுமத்தப்பட்டது. அவர் இலங்கைக்கு வந்திருந்தபோது நான் அவரைப பலதடவைகள் சந்தித்தேன். அப்போதெல்லாம் அவரென்னிடம்சில பணி களைச் செய்து உதவும்படி கேட்டுக்கொண்டார். எனது கல்விச் சேவை காரணமாக கிடைக்கும் ஓய்வு நேரம் அற்பமே. ஓய்வு கிடைக்கும்போது வெளியே சென்று வருவதானல் வழியெங்கும் படையினரின் தடைகள். அடுத்தது, எங்கு சென்றாலும் வீட்டிற்கு ஆறு மணிக்கு முதல் திரும்பியாக வேண்டும் என்ற நாட்டு நிலை. இவற்றின் மத்தியில் ஊர்ஊராகச் சென்று தகவல்களைத் தேடுவதென்பது முடியாத காரியம். அதுவும் மறைந்து போன மட்டக்களப்பு மண்ணின் கலைகள், பராம்பரியங்கள், நடை முறைகள் என்பனபற்றி இப்போதுள்ள சந்ததியினருக்கு அதிகமாகத் தெரியாத நிலை. அப்படிச் சில தகவல்களை அறியத்தரும் அனுபவமுள்ள வயோதிபர்களிடம் சென்றால் அவர்களின் ஞாபகத்துக்கெட்டாத சில மாறுபட்ட தகவல்கள்.

இப்படியான நிலையில் ஈழத்துப்பூராடனார் என்னிடம் கேட்டுக் கொண்டபடி வசந்தன் கவிகள்பற்றிய தகவல்களைப் பெற்று அனுப்பி வைத்தேன். அது இப்போது மட்டக்களப்பு மாநிலத்தில் தொன்று தொட்டு வழக்கில் இருந்து வரும் 'வசந்தன்கூத்து ஒரு நோக்கு" என்ற பெயரில் நூலுருவாக்கப்பட்டுள்ளது. அடுத்து அவர் தந்த தேடற் பணி, ஊஞ்சற் பாட்டுகள், வதனமார் வழிபாடு என்பனவாகும். இவற்றில் வதனமார் வழிபாடு பற்றிய சில தகவல்களைத் திரட்ட முடிந்தது. அது இப்போது 'வதனமார் வழிபாடு - ஒரு மதிப்பீடு' என்ற தலைப்பில் நூலுரு வாக வெளிவருவதையிட்டு பெருமைப்படுகிறேன்.

முன்பின் எழுத்துத் துறை அனுபவமில்லாத சாதாரண ஆசி ரியன் ஒருவனை எழுத்தாளனுக்கும் முயற்சியும் ஈழத்துப் பூராடனாரின் தமிழ்ப் பணியில் ஒன்று என்பதை அறிந்தபோது நான் பிரமித்துப்

போனேன். பிறரிடம் இருந்து பெற்ற தகவல்களைக் கொண்டு நூல்களைப் படைப்பவர்கள்; குறைந்த பட்சம் தகவல்களை அளித்தவர்களின பெயர் அட்டவணையிலாவது தகவல்களை மிகவும் சிரமத்துடனும் செலவுடனும் தேடிக் கொடுப்பவர்களின் பெயர்களைச் சேர்க்கத் தவறிவிடும் இக்காலத்தில் ஓரிரண்டு தகவல்கள் மட்டும் சேர்த்துக்கொடுப்பவர்களின் கூட்டு முயற்சியாக நூல்களை வெளியிடும் இவரது பணி வருங்காலப் படைப்பாளிகளுக்கு புத்தூக்கமும் எழுச்சியும் தரும் செய்தியாகும். அவர் இப்படிப்பட்ட முயற்சிகளை இன்ற நேற்றுமட்டுமலல 1960ம் ஆண்டிலிருந்தே செய்து வந்துள்ளார் என்பதற்கு பிரபல கவிஞர் வெல்லவூர்க் கோபாலின் கன்னி மலர் எனும் படைப்பே எடுத்துக்காட்டு.

அவர் இலங்கையில் தங்கியிருந்த காலம் 100 நாட்கள்மட்டுமே. அதற்கிடையில் அவருக்கு கிடைத்த பாராட்டுகளா அநேகம். சந்திப்புகள், செவ்விகள் அநேகம். அதற்கிடையிலும் அவர் தமிழ்ப் பணிகள் மட்டும் செய்யவில்லை பல நற்பணிகளும் செய்தார் என்பதை நான் நேரில் கண்டேன். அவற்றில் நான் கலந்துகொண்டேன். ஆதலால் அவற்றை இங்கு குறிப்பிடுவதால் அவருக்குப் பெருமை சேர்க்காமுடியாவிட்டாலும் சமூகத்தில் சோம்பிக் கிடக்கும் பலர் அவரது முயற்சிகளைப் பின்பற்றி எழுச்சிகொள்வார்கள் என்ற அவாவினல் வெளியிடுகிறேன்.

இவர் வாழ்ந்த இடம் தேற்றுத்தீவு. அதுதான் எனது தாயக முங்கூட. இங்கு அரசினர் பாடசாலையில் இவர் 13 வருடகாலம் பணியாற்றினர். இவரது மனைவியார் திருமதி வியற்றிஸ் பசுபதிப்பிள்ளை செல்வராச கோபால் அவர்கள் எனது ஆசிரியை. அவர் தேற்றுத்தீவு றோமன் கத்தோலிக்க மிசன் பாடசாலையில் தனது ஆசிரியப்பணியை ஆரம்பித்து நெடுநாள் தொடர்ந்து சேவைசெய்து இதே பாடசாலையில் ஓய்வு பெற்றார்.

பசுபதி அக்கா என்ற மதிப்புடன் கிராமத்தவர்களும் மாணவர்களும் அழைத்துப் பெருமைப்படும் இவர்தான் இந்தக் கிராமத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக இக்கிராமத்தில் கற்பிக்கத் தொடங்கிய பெண்மணி. இந்தக் கிராமத்தில் பெண் கல்வி வளரப் பெரும்பாடு பட்டுழைத்தார். இதனல் பல பெண்ணுசிரியைகள் இக் கிராமத்தில் தோன்றினர். இவர் மூன்று தலைமுறைகளுக்கு ஆசிரியையாக இருந்தார். ஒழுங்குக் கட்டுப்பாடும், ஒழுக்கமும் நிறைந்த இவரிடம் படித்த மாணவர்களும் இவருடன் கற்பித்த ஆசிரியர்களும் இவரது நல்லாசிரியக் குணத்தையிட்டு அறிவார்கள்.

அத்தகைய ஆசிரியை தனக்குக் கிடைத்த இளைப்பாற்றுச் சம்பளத்தைச் சேர்ந்து வைத்து, அதே பாடசாலையில் நீர்வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். கனடாவில் இருந்தபடியால் அவரது நேரடிக் கவனத்தில் இதை விரைவில் நிறைவேற்ற முடியாதிருந்தாலும் இலங்கைக்கு வந்த அவரது கணவர் மிகவிரைவாக முடித்து 26.1.2000ந் தினத்தன்று நீர்வழங்கலை தொடங்கச் செய்தார். அப்போது அவர் பேசிய பேச்சில்;



"இது உங்கள் பசுபதி அக்கா தரும் அன்பளிப்பு. இதை ஒன்றே கால் இலட்சம் ரூபாச் செலவில் அமைக்க அவர் இதே பாடசாலையில் தொடர்ந்து கற்பித்து ஓய்வு பெற்றுக் கிடைத்த ஓய்வூதியச் சம்பளத்தில் இருந்து கட்டித் தந்துள்ளார். தூரந் தொலைவில் இருப்பதால் அவரது கரங்களாலேயே இதைத் திறந்து வைக்கமுடியாமல் இருந் தாலும் அவர் இங்கு வரும்போது ரிய முறையில் இங்கு நடைபெறும் திறப்பு விழாவை நினைவு கூர்ந்து. உத்தியோக பூர்வமாகக் கொண்டா டுவார்.

இதேபோன்று இங்கு படித்த மாணவியும் இப்போது இளைப்பாறிய ஆசிரியையுமாகிய திருமதி சின்னப்பிள்ளை தியாகராசா எனப்படும் மாரிமுத்த அக்காவும் தனது சொந்த நிலத்தை இந்தப் பாடசாலைக்கு நன்றிக் கடனுக வழங்கியுள்ளார். இவர்களைப் பின்பற்றி மற்றவர்களும் செய்தால சிறுதுளி பெரு வெள்ளமாகி இந்தப் பாடசாலையின் தேவைகள் முழுமை செய்யப்படும் .

இதைவிட, நான் மேலும் ஒரு செய்தியைச் சொல்லி மனம் மகிழ்கின்றேன். பூரிப்படைகிறேன். அதாவது இந்த நீரவழங்கல் நீர்த்தாங்கிக் கோபுரத்தைப் பார்க்கும்போது என்னெஞ்சில் நிலைத்து நிற்கும் ஒருகாரியம் நினைவுக்கு வருகிறது. எங்களுக்கு எழு மக்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் இந்த ஊரில்தான் பிறந்தார்கள், இந்தப் பாடசாலையில்தான் தங்கள் ஆரம்பக் கல்வியைக் கற்றூர்கள். அதுமட்டு மல்ல அவர்கள் பால்குடிக்கும் பருவத்தில் புட்டிப்பால அருந்தாது தங்கள் தாய்ப்பாலை நேரம் தவருமல் இங்கு கொண்டு வரப்பட்டுத் தாயின் அரவணைப்பில் அருந்தி வளர்ந்தார்கள். இந்த வாய்ப்பு எழிதான தொன்றல்ல . அந்த வசதியைத் தந்த இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு தாகத்துக்கு நல்ல குடிநீர் இலகுவாக அருந்தக் கொடுக்கின்ற ஒரு தாயின் உயர்ந்த உள்ளத்தைக் காண்கிறேன்.

அவ்வாறு பாடசாலைக்கு வந்து தாய்ப்பால் அருந்தி வளர்ந்தவர்களில் ஒருவரான எட்வேர்ட் இதயச் சந்திரா அவர்களே அவரது மனைவி மகனுடன் இந்தக் கோபரத்தைத் தனது தாயின் பிரதிநிதியாகத் திறந்து வைக்கிருர். இந்த நினைவுடன் மாத்திரமல்ல, உங்கள் பசுபதி அக்கா தன்னை வளர்த்து ஆசிரியையாக்கிய தனது அக்காளின் கணவர், அமரர் திரு.சி.தா வேல் முருகு இளைப்பாறிய தலைமை ஆசிரியர் அவர்கட்கு நன்றிக் கடனுகவும் கட்டிப் பெருமை செய்துள்ளார்' இவ்வாறு இந்தப் பணியால் தனது நன்றிக் கடனை நினைவுகூர்கிருர்." என்று உரைத்தார்.

இதற்கு முன்னரே 16.1.2000ந் தினத்தன்று தைப்பொங்கற் பரிசாக பல ஆயிரம் அரிய நூல்கள் கொண்ட தனது இல்ல நூலகததை தன் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட குருக்கள்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றுத்திவு, கழுதாவளை எனும் ஐந்து கிராமங்களின் சொத்தாக்கிப் பொது நூலகமாக திறந்து வைத்தார். இப்போது இது ஒரு ஆய்வு நூலகமாக இயங்கி வருகிறது. பல அரச பணிப்பாளர்களும் பாராளுமன்ற பிரதிநிதியும் சமயப் பெரியார்களும் கலந்துகொண்ட விழாவில் பங்களித்த எனனையும் இந்த நூலகப் பரிபாலகர் குழுவில் ஒருவராக ஈழத்துப்பூராடனுரே நியமித்தார்கள்.

இவருக்குப் பண்டை மட்டக்களப்புக் கலைச் சின்னங்களும் பாரம்பரியங்களும் அழிந்து போகாமல் பாதுகாக்கும் பெரு நோக்குண்டு. அதன் பேரில் அழிந்துபோகும் நிலையில் இருக்கும் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து சேகரிக்கும் எண்ணத்துடன் இந்த நூறு நாட்களில் முயன்றுர்

அவ்வாறு முயன்றதின்பேரில் செட்டிபாளையத்தில் வாழ்ந்து பல நூல்கள் ஆக்கிப் புகழ்படைத்த புலவர் பெருமான் கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்களின நூல்களைச் சேகரித்த வைத்திருந்த,அவரது மகன் அமரர் க,செல்வநாயகம் அதிபர் அவர்களின் பாண்டிருப்பில் உள்ள இலத்திற்குச் சென்று பல ஏட்டுப் பிரதிகளைப் பெற்று பாராளுமன்றப் பட்டிருப்புப் பிரதிநிதி, மட்டக்களப்பு கலாச்சாரச் சபை தமிழ்மணி திரு அன்புமணி இரா நாகலிங்கம், மட்டக்களப்புக் கலாச்சார உத்தியோகத்தர் செல்வி க.தங்கேஸ்வரி என்பார்களிடம் ஒப்படைத்தார்.

மேலும் பல அநாதை நிறுவனங்களுக்கு சென்று, தன்னுல் இயன்ற உதவிகளைச் செய்தார். தான் பணிசெய்த, கற்ற, பயிற்சி பெற்ற கல்வித் தாபனங்களுக்கு மட்டக்களப்பு எழுத்தாளர்களின படைப்புகளை வாங்கி அன்பளிப்புச் செய்தார். இவைகள் எனக்குத் தெரிந்தவை. தெரியாது செய்த காரியங்கள் பலவாகவும் இருக்கலாம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மாணவனை இவர் தனது ஆசிரியரின் நினைவாக நடந்த இரு விழாக்களில் கலந்துகொண்டார்.. அங்கு தமிழ்ப்பணிக்குரிய சிறப்பு விருதும் பெற்றுர். தனது சொந்தச் செலவில் நிறுவிய புலவர்மணியின் உருவச் சிலைக்கு மலர்மாலையணிந்து தனது நன்றிக் கடப்பாட்டை நிறைவேற்றினுர்.

இதைவிட அமரர் ஜோசப் பாலசிங்கம் நினைவு ஆய்வு நூலகத்தின் கைபளிப்பு விழாவின்போது அங்கு உரையாற்றிய இவரது முன்னுள் மாணுக்கர்களின் சொற்பொழிவுகளில் இருந்து;



## ஈழத்துப்பூராடனுரின் மட்டககளப்பு மாநிலம் பற்றிய நூல்கள்

=======

1. மட்டக்களப்பியல்
2. மட்டக்களப்பு மாநில உபகதைகள்
3. மட்டக்களப்புசொல்லகராதி
4. மட்டக்களப்பு மரபுச் சொற்கள்
5. மட்டக்களப்பு பழமொழி அகரவரிசை
6. மட்டக்களப்பு சொல்லிலக்கணம்
7. பிசாசின் புத்திரர்கள் -மட்டக்களப்பு மாந்திரீகம்
8. சொல்வெட்டு
9. நீரரர் நிகண்டு
10. மட்டக்களப்பு உழவர் மாட்சிக் கலம்பகம்
11. கன்னங்குடா உழுதொழிற் பள்ளு
12. இரும்பரசன் பேராசிரியர் சங்கரதாஸ்
13. விபுலானந்தர் வாழ்க்கை வரலாற்று வெண்பா
14. விபுலானந்த அடிகளார் வாழ்க்கை வரலாற்று வெண்பா
15. விபுலானந்தர் தோத்திரப் பாக்கள்
16. விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்
17. புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை வாழ்க்கை வரலாற்று வெண்பா
18. பண்டிதர் செ.பூபாலபிள்ளை வாழ்க்கை வரலாற்று வெண்பா
19. புலமை மக்கள் - அச்சில்
20. மீன்பாடும் தேன்நாடு - அச்சில்
21. வசந்தன் கூத்து ஒரு நோக்கு
22..மட்டக்களப்பில் இருபாங்குக் கூத்துக் கலை - அச்சில்
23, வயலும் வாரியும்
24. மல்லிகைப் பந்தல்
25. ஈழத்து இரட்டையர்கள்
26. செட்டிபாளையம் கணபதிப் பிள்ளைப் புலர் நூற் திரட்டு தொகுதி ஒன்று
27. செட்டி பாளையம் கணபதிப் பிள்ளைப் புலவர் நூற்திரட்டு தொகுதி இரண்டு
28. மட்டக்களப்புத் தமிழறிஞர் வரிசை
29. சிவபுராணம் - நெடுங்கதை
30. வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு
31. கபோத காதை - ஓலை ஏட்டுப் பிரதி அச்சுருவம்
32. இரண்ணிய சம்ஹார அம்மானை - ஓலை ஏட்டுப் பிரதி அச்சுருவம்

"தமிழில் கல்விகற்றவர்களுக்கு ஒரேயொரு வழியாக இருந்த ஆசிரியப் பயிற்சி வாசலை நாடிச் செல்வோரின் வழிகளை திசைமாற்றி, அரச எழுதுவினைஞர், கூட்டுறவு பரிசோதகர், மருத்துவத் தாதி முதலிய அரச துறைகளிற்கு நுழை யும் வாசல்களிலும் காலடி எடுத்து வைக்க வகுப்புகளை நடாத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளார். சிறிய குக்கிராம மாகிய தேற்றாத்தீவை மற்றக் கிராமத்தவர்கள் நாடி வருமளவு இங்கு

1..மனோகரா அச்சகத்தை நடாத்தியும்,

2. தட்டெழுத்துச் சுருக்கெழுத்துப் பயிற்சி அளிக்கும் வேதா தட்டச்சு கற்கை நிலையத்தை ஆரம்பித்தும்,

3. வணிக வகுப்புகளை நடாத்திப் பல வணிக ஆசிரியர்களைத் தோற்றுவித்தும் வந்த இவர் பல்கலைக் கழக மாணவர்களின் ஆய்வுக்குத் தனது நூலகத்தையும் நேரத்தையும் ஒதுக்கியும் வாழ்ந்து கிராமத்துக்குப் பெருமை தேடித் தந்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட பல நூல்களை இலங்கையில் வாழும் போதும் கனடாவில் வாழ்ந்துகொண்டும் படைத்த இவருடன் கூட்டா சிரியாராகச்சுச் சேர்ந்து இந்த நூலைப் படைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த, கிடைத்தற்கரியதொரு பாக்கியமாகும்.

இவரும் இவரது மக்களும் மின்கணனி மூலம் அச்சமைப்புச் செய்து தமிழில் அச்சிடும் பணியை முதன் முதலில் செய்ததுடன் அமரிக்கக கண்டத்தில் தமிழ் அச்சுக் கூடத்தையும் நிறுவி பெருமை சேர்த்து உலகத்தில் முதலிடம் வளர்த்தவர்கள். இவர்களது சேவையை தமிழ் மக்கள நாடிநிற்கின்றர் இவர்களின் தொண்டு பல்காலம் வாழ்க.

**மு.நடேசானந்தம்**
தேற்றாத்தீவு - இலங்கை
*1.11.2000*



தனது குரு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு நிறுவிய சிலைக்கு அவரது நினைவு விழாவில்



மலர்மாலை சாத்தியபோது புலவர்மணி அவர்களின் மக்களின் குடும்பத்துடன் சுழத்துப்பூராடனார்.



இவ்த நிகழ்ச்சியில் புலவர்மணி நினைவுப் பணி மன்ற உறுப்பினருடன்

Batticaloa Community-Canada
மட்டக்களப்பு சமூகம்-கனடா
2000

# கனடிய மட்டக்களப்பு சமுகத்தின் ஆதரவுரை.

==========

மட்டக்களப்பு மாநிலத்தில் வதனமார் சடங்கு என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிற ஒரு தொழில்சார் வழிபாடு உண்டு என்றாலும் அதன் பின்னணி என்ன? எதற்காக அது கைகொள்ளப்பட்டு வருகிறது? அந்த வழிபாடு இன்றும் நடை முறையில் உள்ளதா? எங்கு இத்தகைய வழிபாடு இடம் பெறுகிறது? என்ற பல கேள்விகள் எழுவதுண்டு.

இத்தகைய வினாக்கள என் மனதிலும் எழுந்த போதெல்லாம் என் தந்தையார் அமரர் திரு ஞானமுத்து ( இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் )அதையிட்டு பல குறிப்புகளைச் சொல்லி இருக்கிறார். எனினும் காலப் போக்கில் நான் அவற்றிற் பலவற்றை விளங்கிக் கொள்ளமுடியா திருந்தது. வதனமார் வழிபாடு - ஒரு மதிப்பீடு என்ற இந்த நூல் அவற் றிற்கான விளக்கங்களை தெளிவாக்குகிறது. பட்டிக்காரன், முல்லைக் காரன் என்று கமச் செய்கையுடன் சம்பநதப்பட்ட சொற்களின் ஆய்வு சங்ககாலத்துத் தமிழரின் வாழக்கையையும் அதிலே சம்பந்தப்பட்டிருந்த முல்லை மருதத் திணைச் சம்பவங்களையும் நினைவுக்கு கொண்டு வருகிறது.

மட்டக்களப்பில் மறைந்து வரும் ஒரு தொழில்சார் வாழ்க்கை முறையின் உற்பத்தி வரலாற்றை இந்த நூலில் காண்கிறோம். ஆதி மனி தனின் முதல் தொழிலாக இருந்த வேட்டையாடுதலை அடுத்து வளர்ந்த தொழில் மந்தை மேய்த்தல். மந்தை வளர்ப்பவர்கள் முல்லைத் திணைக் குரியவர்கள் என்றும் அவர்களை;

*முல்லையர், பொதுவர், அண்டர், முந்து கோவிந்தரே, ஆன்*
*வல்லவர், குடவர், பாலர், மதித்த கோவலர் , கோபாலர் ,*
*சொல்லிய அமுதர், ஆயர், தொதுவர், இடைய ரென்ப*
*முல்லையின் மாக்கள் பேர்தாம் முன்நான்கு மொன்றுமாமே*

சூடாமணி நிகண்டு - மக்கட் பெயர்த் தொகுதி - 69



எனும் 12 பெயர்களால் அழைப்பர். நெல்விளை வளங்கொண்ட நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் மட்டக்களப்பிலும் மந்தை வளர்த்தல் தொழில் பண்டு தொட்டு இருந்து வந்துள்ளது. 'ஏரும் எருதும் உளவாயின்' எனும் வயற்களச் சொற்றொடர் வேளாண்மையைச் செய்கைக்கு கால்நடைகள் எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகிறது. எருதின் இடத்தை இன்று உழவு இயந்திரங்கள் எடுத்துக் கொண்டாலும் அவற்றால் பாலும், முளிதயிரும், நெய்யும் தரமுடியா திருப்பது கண்கூடு. எனவே கால்நடைகளின் ஒரு உபயோகம் மட்டும் மங்கி வரும் காலத்தில் அவற்றின் ஏனைய உபயோகங்கள் வளர்ந்து வரு கின்றன. அதுவும் நவீன மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

மந்தை கார்ப்போருக்கு நிகண்டுககள் பனிரெண்டு பெயர்களைத் தந்துள்ளது. இவற்றில் எந்தவொரு பெயரும் மட்டக்களப்பு மந்நை காப்-போரைக் குறிப்பதாக இல்லை. அதுமட்டுமல்ல அவற்றில் தரப்படாத வேறு ஒரு தனித்துச் சொல்லாலே வழங்கப்பட்டு வருகிறது. அதுதான் 'பட்டிக் காரன்' என்ற சொல்லாகும். இவனின் குலத்தொழில் இதுவல்ல. இவன் ஆதியிலிருந்து வயற் சொந்தக்காரர்களின கால்நடைகளைப் பேணுவதற் காக அமர்த்தப்பட்ட ஒரு தொழிலாளி. கால் நடை வளரும் இடமாகிய பட்டியைக் காத்து வருவதால் பட்டிக்காரன் எனும் பெயருக்குரியவனா கிறான். இவனின் பேராபத்துமிக்க வாழ்க்கையை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். மறைந்து வரும் ஒரு மட்டக்களப்புத் தமிழ்ப் பண்பாடு ஒன்று இந்த ஆக்கத்தின் மூலம் ஆவணப்படுத்தபபடுகிறது.

இதற்காகப் பல வருடங்கள்அரிதில் முயற்சியெடுத்துச் சேகரித்து வைத்துப் புலம் பெயர்ந்தகாலை இலங்கையில் விட்டு வந்த குறிப்புக ளையும் காவியங்களையுந் தாயகத்திற்குச் சென்று திரும்பிய இவர் எடுத் துக்கொண்டு வந்து இந்த நூலைப் படைத்துள்ளார். இவரின் இலங்கைப் பயணத்தின் பலனாகக் கிடைக்கும் இந்த நூலைப் போல இன்னும் என்ன வென்ன சேகரிப்புகளைக் கொண்டு வந்துள்ளாரோ என்பதை இனி வெளிவரும் படைப்புகள் எடுத்தரைக்கும். அதுவரை பொறுத்திருப்போம். முதுமையிலும் படைப்பிலக்கிய முயற்சியில ஈடுபட்டுள்ள இவருக்கு இறைவன் சுக நலத்தை அளிப்பானாக

**சக்தி சாந்தன்**

விறும்ரன் ஒன்ரோறியோ கனடா



ஈழத்துப்பூராடனார் தனது இல்ல நூலகத்தை பொது நூலகமாக மாற்றி தன் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட அயற் கிராமங்களுக்குச் சொந்தமாக்கிய விழாவில்



அவரின் மகன் நிழல் சந்திரா அவர்கள் நன்றி தெரிவித்தும் கலாச்சார உத்தியோகத்தர் செல்வி க.தங்கேஸ்வரி வரவேற்றும் பேசுகிறார்கள்.



# மட்டக்களப்பு அன்பு வெளியீட்டு ஆதரவுரை.

'பட்டிக்காரன்' என்ற ஒரு சொல்லை வைத்துக்கொண்டே ஒரு வழிபாட்டு இலக்கியம் படைத்துள்ளார் ஆசிரியர். இது வழிபாட்டு இலக்கியமாக இருந்தாலும் ஒரு வரலாற்று ஆய்வு நூல் என்பதே மிகப் பொருந்தும். மட்டக்களப்பின் வயற்செய்கையில் அதிகமாக உபயோகிக்கப்படும் 'முல்லைக்காரன்' என்ற பதத்தின் பொருளும் இந்த நூலினுல் வெள்ளிடை மலைபோல் தெளிவாகிறது.

பொதுவாக எந்த ஒரு மதவழிபாட்டிற்கும் பின்னுல் ஒரு புராணத்தின் கதையமைப்பு இருப்பது வழக்கம். அதுபோலவே சில வழிபாட்டுகளுக்குப் புராணப் பின்னணி இல்லாதவிடத்து பரம்பரைக் கதையொன்று நிச்சயமாக பின்னப்பட்டிருக்கும். இது உண்மையோ அல்லது கட்டுக்கதையோ என்று எவரும் ஆய்ந்தறிய முயல்வதில்லை. வழிபாட்டின் அவசியம், அதில் உள்ள நம்பிக்கை அந்த நம்பிக்கையால் மக்கள் பெற்ற அனுபவம் என்பவற்ருல் அந்தப் பரம்பரைக் கதை நாளடைவில் ஒரு உண்மையான சம்பவமாகவே மாற்றமடைந்து விடுகிறது.

இப்படிப்பட்ட வழிபாட்டுத் தெய்வங்களுக்கு அவதாரம ஒன்று படைக்கப்படுகிறது. அதுவும் தெய்வ அம்சம் பொருந்திய அற்புதப் பின்னணியில் அந்த அவதாரம் நிகழ்கிறது, தொடர்ந்து அந்தத் தெய்வத்தின் செயல்கள் மக்களின் இடர்களை அகற்றுவதாகவும், அதற்காக பல தீர வீரச் செயல்களையும் அற்புதங்களையும் நிகழ்த்துவதாகவும் சொல்லப்படுகிறது. இந்த அடிப்படையில் ஏற்பட்டதே வதனமார் அவதாரமும் வழிபாடும் என்று சொல்லலாம்.

மட்டக்களப்பில் நிலை கொண்டிருக்கும் இந்த வதனமார் வழிபாடு மந்தை கார்த்தலுடன் தொடர்புடையது. கமத்தொழிலுக்கு உதவும் கால் நடைகள் வயற்காரர்களின் செல்வமாக மதிக்கப்படுகிறது. எனினும் மருத நிலத்தில் அவற்றை வைத்துப் பேணுவதென்பது மிகவும் சிரமமான காரியம். ஆகவே அருகில் உள்ள காடும் காடு சார்ந்த இடங்களிலும் பட்டி அமைத்து வளர்க்கப்பட்டன. அதற்கு உதவும் பட்டிக்காரர்களின் வரலாறு இங்கு தெளிவாக்கப்படுகிறது. சுவாதியம்மை என்னும் இருபத்தேழு

நட்சத்திரங்களில் ஒன்றான சோதி நட்சத்திரத்தின் மக்களாக அவதரித்த மங்கலனுர் முதலிய நூற்றி அறுபது வதனமார்களும் இந்தியாவிலிருந்து இலங்கையின் கிழக்குப் பகுதியில் கால் வைத்து திருகோணமலை இருந்து திருக்கோவில் வரை மட்டக்களப்பு வாவிக்கு மேற்கில் உள்ள காடுகளில் அலைந்து திரிந்து குழுமாடுகளைப் பிடித்து பட்டிகள் அமைத்து வாழ்ந்தார்கள். இதை 'வதனமார் ஊர் சுற்றுக் காவியத்தின்' மூலம் அறியலாகும். அதுபோலவே தேன்வெட்டுக் காவியம், வதனமார் பூசைக் காவியம், குழுமாடு பிடித்தல் காவியம், மதயானை பிடித்தல காவியம் என்பன அவர்களின் தீரவீரச் செயல்களைச் செப்புகின்றன.

இப்போது உழவு இயந்திரத்தின் அறிமுகத்தால் வேளாண்மைச் செய்கைக்கு கால் நடைகளை உபயோகித்தல் மிகமிகக் குறைந்து வருவதால், பட்டிக்காரர்களின் வாழ்க்கை முறை பாற்பண்ணை வாழ்க்கை முறையாக மாறியுள்ளது. இதனுல் வதனமார் வழிபாடு மிகவும் குறைந்து வருகிறது. இத்தருணத்தில் இந்தப் பராம்பரிய பண்பாட்டு வழிபாட்டை நினைவுக்குக்கொண்டுவர ஆசிரியர் முயன்றுள்ளார்.

இதை இவர் *1956*ம் ஆண்டிலிருந்து தேடிச் சேகரித்து; வைத்திருந்தார். இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து கனடாவில் வாழச் சென்றபோது இதுபோன்ற பல அரிய சேகரிப்புகள் இலங்கையில் அவரது இல்லத்தில் கைவிடப்பட்டிருந்தன. பதினுறு வருடங்களுக்குப் பின்பு வந்து அவற்றைச் திரட்டிச் சென்று இப்போது நூல்களாக வெளியிட்டு வருகிருர். இவரது முயற்சியால் மறைந்து போக இருந்த ஒரு பண்பாட்டு வரலாறும், இலக்கியமும் அழியாது பேணப்படுவதில் எங்களது ஆதரவும் இருப்பதையிட்டுப் பெருமைப் படுகிறோம்.

ஈழத்துப்பூராடனுரை நாங்கள் பலதடவைகளில் தனது சுய வரலாற்றை எழுதும்படி சொல்லியும் வாழாதிருந்தாலும அவர் படைக்கும் நூல்களின் பதிப்புரை,முகவுரை,அறிமுகவுரைகள்மூலம் சிறுசிறு துணுக்குகளாக இவரது வாழ்க்கை வரலாறு வெளிவருகிறது. அதையே இந்த நூலிலும் கூட்டாசிரியர் திரு. மு.நடேசானந்தம் இந்நூலில் தந்துள்ளார்

**அன்புமணி இரா நாகலிங்கம்**
**செல்வி க.தங்கேஸ்வரி**
அன்பு வெளியீடு
மட்டக்களப்பு
*14.11. 2000*



# வதனமார் வழிபாடு
# ஒரு மதிப்பீடு

# நூல் அறிமுகம்.

வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு எனற இந்த நூல் 'வதனமார்', 'பட்டிக்காரன்', என்ற இரண்டு சொற்களைக் கொண்டு அவற்றின் மூலங்களையும் காரியங்களையும் இட்டு ஆய்தறியும் இலக்கிய நோக்குடன் செய்யப்பட்டாலும் , இவற்றுடன் சம்பந்தப்பட்ட 'முல்லைக்காரன்' என்ற பதமும் இந்தக் கட்டுரைக்கு ஆணி வேராக அமைந்துள்ளது. இந்தப் பதம்பற்றி இலங்கை வானொலியில் மட்டக்களப்பில் வழங்கப்பட்டு வரும் சங்க காலத்து நூற்களில காணப்படும் சொற்கள்பற்றிய விளக்கத் தொடராக ஒலிபரப்பப்பட்டது. பின்பு அவற்றில் 12 பதங்களின் விளக்கங்களை மட்டக்களப்பு சொல்வெட்டு எனும் நூலாக 1984ம் ஆண்டு தேற்றாத்தீவு ஜீவா பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. அந்த நூலின் 19ம் பக்கத்தில் நான்காவது பதமாக முல்லைக்காரன் எனும் சொல்பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையை வாசகர்களின் நலன் கருதி மீண்டும் இங்கே தருகிறோம்.

" இது மட்டக்களப்பு நெற்செய்கையாளர்களிடை பயிலப்பட்டு வரும் சொல். வேழாண்மைச் செய்கையோடு சம்பந்தப்பட்ட மரபுச் சொற்கள் அநேகம். அவற்றில் இதுவொன்று. வயற் சொந்தக் காரனைப் போடியார் என்றும் பரிபாலனஞ் செய்பவர்களை வட்டை விதானை, அதிகாரி என்றும் கூலிக்கு வேலை செய்பவனை முல்லைக்காரன் என்றும் அழைப் பதுண்டு.

இம்முல்லைக்காரன் என்ற சொல்மூலம் ஐந்திணை நிலப் பண்பும் பாங்கும் பண்டைக் காலத்தில் எவ்வாறிருந்தன என்பதை ஆய்ந்தறியலாம். காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை. அதனையடுத்த வயலும் வயல்சார்ந்த இடமும மருதம். இப்புலமிரண்டும் ஒன்றை ஒன்று தொடர்ந்து தொட்டு நிற்பன. இவ்வுண்மைகளை தொல்காப்பியம் பொருளதிகாரமும்,, இறையனுர், மாறனுர், நம்பியகப் பொருள்கள் என்பனவும் கூறுகின்றன. முல்லை வாழ்வு மந்தை மேய்க்கும் ஆயர் வாழ்வாகும். அலைபவர் , தொழில் நிலையற்றவர் என்று இவர்களைக் குறிப்பிடலாம். மருத நில மக்களோ நிலைத்து நிலத்தை நம்பி வான் மழையால் ஊன் புரக்கும் உணவாக்குபவர்கள். நெல்லீந்து உயிர்காக்கும் மருத நில மக்களின் வாழ்க்கைக்கு அதிக மனித வலு தேவை. ஆக்கல், காத்தல், திரட்டல், பேணல் எனும் பல தொழிற்பாடுகளின் பின்னரே வேழாண்மைச் செய்கை நிறைவுறும்.



இத்தொழில்களை மருத நிலமக்கள் செய்ய முடியாத விடத்து தம் அயல் நிலத்தில் வாழும் முல்லைத் திணை மக்களின சேவையையும் அவர்களின் மந்தைகளையும் கொள்வது வழக்கம். இவ்வாறு தொழிற் துணை செய்ததால் இவர்கள் முல்லைக்காரர்கள் எனப்பட்டனர். வடக்கிலிருந்து வந்தோரை வடக்கர் என்பதுபோல முல்லையிலிருந்து வந்த இவர்களை முல்லைக்காரர் என்பது வழக்கமாயிற்று. வேட்டைக்காரன் கமக்காரன் போல முல்லைக்காரன் எனும் சொல் பிறந்தது. அக்காலத்தில் இவ்விரு திணை மக்களுக்கும் எவ்வாறன தொடர்பிருந்தது என்பதனை இந்த முல்லைக்காரன் என்ற சொல் மூலம் தெரிகிறது. அந்த வழக்கமும சொல்லும் இன்றும் மட்டக்களப்பில் பயிலப்பட்டு வருகிறது.

வயற்செய்கைச் சொந்தக்காரெனப்படும் போடிமார்க்கு இன்று வேழாண்மைச் செய்கைக்கு முல்லைக்காரர்கள் பல வழியிலும் உதவி வருகின்றனர். வயலில் கூலி வேலை செய்பவர்களுக்கும் போடிமாருக்கும் இடையில் தொடர்பாளராகவும். மற்றும் உழுதல், விதைத்தல். காத்தல், வெட்டல் . சூடுபோடுதல் என்பன சரிவர நடைபெறக் கண்காணிப்பவராகவும் இருந்து வருகிறார்கள். இவர்கள் இப்போது மருதத் திணை மக்களாகிவிட்டனர். எனினும் முல்லைக்காரன் என்ற சொல்லுக்கு உரியவர்களாக இந்தத் தொழிலைச் செய்து வருகின்றனர். இப்போது இவர்கள் கால்நடைகளைப் பேணுவதும் இல்லை. உழவுத் தொழிலுக்கு அவற்றை வழங்குவதும் இல்லை. இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பது ஆய்ந்தறிய வேண்டிய விசயமாகும்.

கால்நடைகளை வளர்ப்பதும் பேணுவதும் போடிமாருக்கு மிகவுஞ் சிரமமான காரியம். உழுதல், மிதித்தல், சூடுபோடல் எனும் ஒரு சில தொழில்களுக்கே கால்நடைகள் ஒரு சில நாட்களுக்கே வேண்டப் பட்டன. இந்தத் தேவைக்கு அவற்றை போடிமார் தம்முடைய பராமரிப்பில் வைத்துக் காப்பது என்பது முடியாத காரியம். எனவே காட்டு மத்தியிலே பட்டிகளை அமைத்து அதை ஒருவனுக்கு ஒப்படைத்து காத்துவரச் செய்தனர். அவர்களைப் பட்டிக்காரன் என்ற அழைத்தனர். இப்படியாக முல்லைக்காரர்களின் கையிலி ருந்த கால்நடை வழங்கல் பட்டிக்காரனின் கைகளுக்கு மாறியது. நாளடைவில் பட்டிக்காரர்கள் பாற்பண்ணைக் காரர்களாகி வருகின்றனர்.

இப்போது போடிமாரும் அருகி விட்டனர். காரணம் மட்டக்களப்பு மக்களின் திருமண ஒழுங்கின்படி மாப்பிளைக்குச் சீதனமாக, வீடு, கிணறு உட்பட்ட வளவு, வயற்காணி. கால்நடை கொடுப்பதுடன், திருமணமாகி ஆறு மாதங்களுக்கு குடும்பச் செலவை பெண்ணின் குடும்பத்தார் ஏற்றுக்கொள்வர். வயலில் ஒரு போகச் செய்கையை விதைத்து வெட்டி சேர்த்தும் தலைப்பிள்ளைப் பிரசவச் செலவையும் ஏற்றுக்கொள்வர். இப்படிச் செய்வதால் மணமகனின் பொருளாதாரத்தை

நிலைப்படுத்துவதுண்டு. இதைவிட திருமணமாகிய பின்னர், மணமகன் பெண்வீட்டிலேயே வசிக்கத் தொடங்கிவிடுவார். இதனல் மாமி மருமகள் தொல்லைகள் நிகழ்வதில்லை. இந்த முறையால் பல ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த போடிமார் தங்கள் நிலத்தை மக்களுக்கு பங்கிட்டு வருவதால் இறுதியில் அவர்களின் பெரிய அளவிலான சொத்துக்கள் குறைந்துவிடச் சிறு வயற் சொந்தக்காரர்களின் தொகை பெருகி விட்டது. இதனல் முல்லைக்காரன் எனும் வயற் செய்கைக்காரர் களின தேவையும் குறைந்துவிட்டது.

பட்டிக்காரர்களின் வாழ்க்கை மிகவும் அபாயமும் பரிதாபமுஞ் சூழ்ந்தது. இதே நோக்குடன் வாழும் அமரிக்காவில் உள்ள Cow - Boy எனும் மந்தை வளர்ப்போரின் வாழ்க்கை ஒத்திருந்தாலும். இவர்களின் உடைகள், தொப்பி, காலணி என்பன ஒருவித பழமை தழுவிய அலங்கார உடை போன்றது. கைத் துப்பாக்கி, கத்தி வெளுக்கயிறு என்பன வற்றைத் தாங்கி குதிரையில் ஏறி இளவரசர்கள்போல் தனிப்போக்குடன் அலைந்து திரிவார்கள். இவர்களைக் கண்டால் பொதுமக்கள் அஞ்சுவர். அத்தகைய வழிபறிக் கொள்ளைக்காரர்களாகவும் இருப்பார்கள். அவர்க ளுடன் நமது பட்டிக்காரர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவர்கள் பரிதாபத்துக்குரிய சீவன்களாகவே உள்ளார்கள்.

பட்டிக்காரர்களைப் பொறுத்த அளவில் காலத்துக்கேற்ற மாற்றங்கள் தாமதமாக ஏற்பட்டாலும், இப்போது ஓரளவு பாதுகாப்புக்கு சுடுகலன் பாவித்தல், பட்டியில் பெறும் பால்வகை உணவுகளை நியாய விலைக்குச் சந்தைப்படுத்தல் வசதிமிக்க வாடி எனும் வதிவிடங்களை அமைத்துக் குடும்பத்துடன் வாழ்தல், பட்டியின் உரிமை என்பவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மந்தைப் பராமரிப்பிலும் மிருக வைத்தியர் களின சேவை கணிசமாகப் பெறப்படுகிறது. முன்பெல்லாம மாட்டு வாகடம் எனும் ஏட்டில் கண்டவாறு மாடுகளின் நோய்க்குப் பரிகாரம் செய்த முறைகள் இப்போது அருகி வருகிறது. கால்நடைகளின் பதி வுகள் வைக்கும் மாட்டு இடாப்பு முறையிலும் பெரிய மாறறங்கள் புகுத்தப்பட்டுள்ளன. கிராமத் தலைமைக்காரர்களால் பரிபாலிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சூட்டு அடையாளச் சின்னங்கள் இடப்படும் பணி இப்போது, அரசினரின் கால்நடைப் பகுதியினரால் மாத்திரம் அதற்குரிய அடையாள இலக்கங்களுடன் இடப்படுவதுடன் அதற்குரிய பதிவுப் பத்திரமும உடனே வழங்கப்படுகிறது. இப்படி நவீன வாழ்க்கை வசதிகள் சிறிது சிறிதாகப் புகுத்தப்பட்டதால் பட்டிக்காரர்களிடை வதனமார்பற்றிய நம்பிக்கையும் வழிபாடும். அருகி வருகிறது. எனவே இத்தருணத்தில் வதனமார் வழிபாடுபற்றி நினைவுகூர்வது, மறைந்து வரும் மட்டக்க ளப்பின் பண்டை மரபு வழிபாடு ஒன்றை ஆவணப்படுத்துவதாக அமையும் என்ற நோக்குடன் இந்த நூல் உருவாகிறது

====================.



# வதனமார் வழிபாட்டு இலக்கியங்கள்.

=======

மட்டக்களப்பு மாநிலத்தில் வயற் செய்கையும் அதற்கு மிகவும் உதவி செய்யும பசுக்கள், எருமைகள் போன்ற கால்நடைகளை வளர்க்கும் பட்டித் தொழிலும் இணைந்து நடைபெறுவது வழக்கம். பட்டித் தொழி லுக்கு இப்போது தைப் பூசத்தை அடுத்து வரும் மாட்டுப் பொங்கல் நடை பெறுவது போல மந்தைகளை தீய பிணிகளிலும், கெட்ட ஆவிகளிலும், கொடிய மிருகங்களிலும் இருந்து காப்பாற்ற வதனமார் என்னும் தேவ தைகளை வழிபடுவர். இது பொங்கலுடன் கூடிய பூசையாக இராது பல நியமங்களைக் கொண்டதொரு இரவு நேர வழிபாடாகவும் அமையும். பொதுவாக மாடுகளை அடைத்துக் காக்கும் பட்டிகளின் அருகிலே காட்டின் அமைதியிலே இந்த வழிபாடு நடைபெறும். இதில் மந்து, வெளுஎனும் மாடுபிடிக்கும் சுருக்குக் கயிறு, ரொட்டி, மொந்தன் வாழைப் பழம், மதுப்போத்தல், கஞ்சா எனும் படையல்களையும் உபகரணங்க ளையும் வழிபடு பொருட்களாக வைத்து வணங்குவர்.

சூடு போடலுக்கு முன்னர் இந்த வழிபாடு நடக்கும். பட்டிக ளுக்கு வயற்சொந்தக் காரர்களான போடிமாரே உரிமையாளராக இருப்ப துண்டு. முல்லைத் திணைக்குரிய வழக்கம் இது என்பது குறிப்பிடத் தக்கது. வயலை அடுத்த காடும் காடு சார்ந்த நிலத்திலும் பட்டிகள் அமைக் கப்படுவதும் பட்டியையும் வயலையும் காத்துப் பேணும் பணியாளனை முல்லைக் காரன் பட்டிக்காரன் என்று அழைப்பதும் மரபு. பட்டிக் காரன் பட்டியில் இருந்து வரும் பால், தயிர், நெய், என்பவற்றை ஊதியமாகக் கொள்வான், அதுமட்டுமல்ல பட்டியில் புதிதாகப் பிறந்த கால்நடைக ளுக்கு குறிச்சூடு போடும் போது பட்டிக்காரனுக்கொன்று சில கால்நடை களுக்கு குறியிடுவார்கள்.இந்தக் குறிகள் சொந்தக் காரர்களின் குலத் துக்கு இடத்துக்கு என்ற பிரித்தறியும் வகையில் உள்ள சின்னங்களாக அமையும். இதன்மூலம் முல்லை நிலத்துக்குரிய பண்டைத் தமிழ்ப் பண்பாட்டுக் கூறு இங்கு பேணப்படுவது கண்கூடு. காட்டின் மத்தியில் நடைபெறும் வதனமார் சடங்கில் வதனமார் காவியம் பாடப்படும். உடுகின் ஓசையில் இது இணைந்து ஒலிக்கும். அப்போது சந்நதம் கொள்ளும் வதனமார் உருக்கொண்ட சிலர் பத்திரம், கமுகம் பாளை என்ப வற்றைக் கைப்பிடித்துக் கட்டுச் சொல்வர். அத்தருணம் பாடப்படும் பாடல்களின் தொகுப்புகள் பின்னல் தரப்படுகினறன;

# 1. வதனமார் யானைகட்டு அகவல்

### காப்பு

சீராரும் மங்கலனார் திருக்கதையை நான் பாடக்
காராரும் ஐந்துகரக் கற்பகமே முன்னடவாய்
நடமாடும் பாம்பணை நாராயணன் புகழ் பாடத்
தடமாருங் கயிலைமலைச் சங்கரனார் முன்னடவாய்

### மங்கலனார் வரலாறு - எழில் தோற்றம்

கற்றகுழ மங்கலனார் காசியெனு மாநகரில்
வாய்தத கமலப் பூவில் வந்த வரலாறு செப்பச்
செப்பரிய பூமுலையாள் சுவாதியம்மை தன்னருளால்
மெய்க்கமல வேல்விழியாள்மாமறையோர் தங்குலத்தில்
கற்புநெறி முத்தியுள்ள கனகமணிக் கன்னியென்பாள்
பக்தியுடன் செந்தாமரைப் பூவில் வந்துதித்து
மங்கலனார் வரக்கண்டு அவர்பாதம் போற்றி செய்து
பன்னிரண்டாண்டு பரிவாகச் சென்றபின்பு
முற்றவே பன்னிரண்டு முப்புரி நூலுமணிந்து
வல்லயம் வில்லம்பு வாய்த்த வெளுக் கோடாலி
சொல்லரிய பூந்துகிலும் சொக்காய்களு மணிந்து
கல்பதித்த மோதிரமுங் கடுக்கன் மேலீடுகளும்
நல்ல சட்டை தொப்பிகளும் நயினாருந் தானணிந்தார்
எல்லா மணிந்து இருந்தாரே மங்கலனார்

### பாலா வதனனிடம் மதயானை தேடி வரச் சொல்லல்

இருந்து திருமத்து இசைவாகத் தானெடுத்துப்
பாலா வதனனுடன் பலபேரையு மழைத்து
உற்ற வதனன் ஓடி வந்து தெண்டனிட்டு
நிற்பளவி லப்போது செப்புவார் மங்கலனார்
வெற்றிசேர் பூவுலகில் விரைவாகத் தான்தேடி
மத்தகயம் பார்த்து வாருமென்றார் மங்கலனார்
வெற்றி சேர் பூவுலகில விரைவாகத் தான்தேடி
மத்தகயம் பார்த்து வாருமென்றார் மங்கலனார்

### பாலா வதனன் மதகரி தேடிக் காணல்

பொன்னொத்த மார்பன புகைபோலே தான்தேடி
நீடுதிகழ் வாவிகளால் நிறைந்த பூங்காவனமாம்
தேடியெங்கு மோடித் திரும்பி வருகையிலே
கொண்டை முடித்துக் குணமுடனே பொல்லெடுத்து
முண்டி யிருள்போலே வளைத்தார் மதகரியை
வளைத்ததனைக் கண்டு மதம்பொழிந்து குஞ்சரமும்
அந்தரமும் விண்ணும் அதிரவே கையூதி
மரத்தை முறித்தெடுத்து மண்டியிட்டுத் துரத்தியதாம்

### மதகரியை அடக்கமுடியாமல் மங்கலனாரை அழைத்தல்

துரத்தி வருகையிலே தொளி வதனன் வந்ததெதிர்த்துக்
கண்ட கோடாலி மழுக் கையம்பு வில்லெடுத்து
சாடி யடித்துத் தலைதிரும்பிக் கொண்டோடி
ஓடி மரத்திலிட்டு ஓம்நம சிவாயவென்று
கூடி வெளுத் தெறித்துப் பாதத்தால் மோதிவர
மோதிவரு மானைதனை முன்னின்று பொல்லெடுத்து
மறித்தார் படுவதனன் மாபாவி யானையது
பார்க்க வந்த வீரர்களைப் பலதிக்குந் தான்துரத்தி
அடுத்த மரம் பிடுங்கி யவரைத் துரத்துகையில்
நம்மால் முடியாது நயினார்க்குச் சொல்லுமென்றார்

### குஞ்சரச் சிறப்பு உரைத்தல்

என்று பாலாவதனன் இந்த மொழி தானுரைக்கக்
கூடிவந்த குஞ்சரமுங் குமுகம் பூச் சோலையிலே
நீர்குடித்து முக்குளித்து நின்றுவிளை யாடையிலே
பார்த்து நின்று கண்களித்துப் பஞ்சவர்ணக் கொம்பனைத்தான்
பன்னீராயிரம் பிறப்பு இறந்து பிறந்தாலும்
மண்ணுலகிற் கிட்டாது மாணிக்கக் கொம்பனென்றார்

### குஞ்சரத்தை அடக்க மங்கலனார் புறப்படுதல்

இந்த மொழி கேட்டு இன்புற்றார் மங்கலனார்
சந்தோஷப் பட்டுத் தன்மனது பூரித்து
வாருங்கோ வென்று வதனமாரை யழைத்து
எல்லோரும் பொல்லெடுங்கோ இசைத்த வெழுத் தானெடுங்கோ
என்று மொழிந்தாரே எல்லோர்க்கும் மங்கலனார்
தானுமிசைந்து தலைகோதி எண்ணெயிட்டு
வன்னப் பிரம்பெடுத்து வாய்த்த வெழுத் தானெடுத்தார்
பொன்னின் மிரிதடியில் புறப்பட்டார் மங்கலனார்
மண்ணதிர விண்ணதிர வதனமார் சூழ்ந்துவரச்
சொல்லரிய பூங்காவைச் சூழ வளைத்தார்கள்
வளைத்து மதனமாரும் மதகரியைத் தான்பார்த்துத்
தழைத்த மரச் சோலையிலே சந்திரனைச் சேர்வதென்று

### திருப்பாற் கடல்வதனன்

சென்று ஒரு நொடியில் திருப்பாற் கடல்வதனன்
வந்து முன்னே நின்று வாய் புதைத்துத் தெண்டனிட்டு
இந்திரனுர் தன்னருளால் ஈசன் திருவருளால்
கந்த மருஞ் சோலேயிலே கன்னிமார் தன்னருளால்
இந்தவிதமே நாங்க ளறிந்தநிலே நாயகமே
எழுந்தருளாய் நாயகமே யிலங்குமணிக் கொம்பனேததான்
மந்துதனே தனேயெடுத்து வந்தார் மதகரிமுன்
நடந்தவரைக் கண்டு நல்ல மத யானேயுந்தான்
அடர்ந்து நயினுர் அடிப்பாதங் குத்தியதாம்
குத்திவருங் குஞ்சரத்தின் கொம்புதனே விலக்கி
வெற்றி விநாயகரே என்று வெளுப் பூட்டி
வெளுப் பூட்டி விட்டதற்பின் வீரவிளந்தாரி யெல்லாம்
பழுத்த மரந்தனிலே பட்சி வந்த சேர்ந்தாப் போல்
வந்துதலே மந்தெறிந்து மரத்திலே அடுத்தாராம்

### மதகரிமேல் மங்கலனுர் பவனி வருதல்

அடுத்த மதகரியை அனேவோரும் தான் மதித்து
சிரித்து விளேயாடிச் சிநேகித் திருக்கையிலே
வேர்த்து வந்துநின்று வெண்கமலப் பொய்கையிலே
கோலம் பெறவே குளிப்பாட்டிக் கொண்டு வந்து
காலுக்குத் தண்டை கழுத்துக்கு வீரமணி
மேலுக்கு வெள்ளே வீதியிலே கொண்டு வந்து
சட்டையணிந்து சகலாத்தும் தானணிந்தார்
தொப்பி யணிந்து சூனியமுந் தான்முடித்தார்
பொன்னின் பிரம்பெடுத்து பொற்றுகிலும் மேற்போட்டு
வண்ணமுள்ள மங்கலனுர் மதயானே மேலேறிச்
சின்னக் குழலூதச் செந்தமிழோர் பாடிவர
அன்னநடைக் கன்னியர்கள்ஆலாத்தி ஏந்திவரக்
கங்கை நதிசூழக் கற்பகப் பூங்காவினிலே
மங்கலனுர் வீதிவர வதனமார் சூழ்ந்துவர
எங்கும் மதிக்க எழுந்தருளி வந்தாராம்
திருந்து புகழ் மங்கலனுர் சீர்பாதந் தான்வாழி
வருத்து பிணிதீர்க்கும் மங்கலனுர் தான்வாழி
பாடினேர் வாழி படித்தோர் மிக வாழி
நாடிப் படித்தவர்கள் நாள்தோறும் வாழியதே

அரிராமர் ஜெயம்



## 2. வதனமார் குழுமாடு கட்டு அகவல்

### காப்புப் பகுதி

ஐந்து கரத்தோனே ஆனே முக வேதியனே
வஞ்சியுமை யாள் பயந்த மதகரியே வாரணமே
தொந்தி வயிற்றேனே தோராத ஐங்கரனே
தாரார் அறுமுகனே சண்முக வேலாயுதனே
சீராரும் வெற்றிமயில் ஏறிவருஞ் சேவகனுர்
சேவகனுர் மங்கலனுர் சீர்பாதம் பாடுதற்குக்
காவலாய் வந்துதித்த காரண மேனியனே

### வேதியரை அழைப்பித்தல்

சந்தனத்தாற் கால்நாட்டி சாந்தாற் றரைமெழுகி
அந்தன் திருவுளத்தில் அரியோன் தனேநினேத்து
விட்டுணு வேதம் விறும குலம் தான் விளங்கச்
செந்தாமரை மலரைச் சேயிளேயாள் கைகொடுக்கச்
செந்தாமரை மலரைச் சேயிளேயாள் கைவாங்கி
வேதப் பிராமணரை வேதியரை அழையுமென்றுள்

### செல்வன் பிறக்க நல்ல தினம் பார்க்கச் சொல்லல்

வேதப் பிராமணரும் வேதியரும் வந்தபின்பு
வேதப் பிராமணரே வேதியரே நாட்சொலுங்கோ
வெள்ளி சனிக்கிழமை வேண்டிய நாளுங்களுக்கு
பூணுரம் பூணப் புதன்கிழமை நல்ல தினம்
செல்வன் பிறக்கத் திருந்திய நாள் வேண்டுமென

### வேதியர் நல்ல தினம் பார்த்துச் சொல்லல்

பஞ்சாங்கந் தானெடுத்துப் பலவிதமாய் நாள் பார்க்க
ஒன்பது கிரக மொன்றித்து நிற்குது காண்
உச்சிவரமுன் கதிரோன் ஒன்பதடி நேரம்
திங்கட் கிழமை சிறந்தநாள் நல்ல தென்றுர்

### பாலர்கள் பதின்மர் பிறந்தனர்

வேதப் பிராமணரை வேதியரையும் அனுப்பி
ஒன்று பிறந்தது உடையோன் தனைத் தொழுது
இரண்டு பிறந்தது இலக்குமணரைத் தொழுது
மூன்று பிறந்தது முக்கண்ணரைத் தொழுது
நாலு பிறந்தது நாலுமுகனைத் தொழுது
ஐந்து பிறந்தது ஐங்கரனைத் தொழுது
ஆறு பிறந்தது அரனார் தனைத் தொழுது
ஏழு பிறந்தது இளையபெருமாள் தொழுது
எட்டுப் பிறந்தது ஈசுபரரைத் தொழுது
ஒன்பது தான் பிறந்தது ஓம்நவசிவாய வென்று
பத்துப் பிறந்தவுடன் பாலகருந் தான்பிறந்தார்

### பெரிய இளந்தாரி

பிறந்து வளர்ந்தாரே பெரிய இளந்தாரி
பத்து வயதும் பதினாறுஞ் சென்றபின்பு
யானை சமர்த்தை யாரறியப் போறார்காண்
காலி சமர்த்தைக் கருதுவோம் வாருமென்றார்
வில்லம்பு செல்லை வெளுக்கயிறு கோடாலி
மின்னுங் கிரிசவடி மேல்வளைந்த கோடாலி
எல்லையில்லாப் பொல்லை எடுத்து நடந்தாராம்

### மங்கலனார் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வருதல்

அயோத்தி யிருந்து அழகுள்ள மங்கலனார்
இராவணனா ராண்ட இலங்கைக்கு வந்தார்
சாய்ந்த மரத்தடியில் சாவாற்றுப் பொய்கைதனில்
நல்ல நிழலில் நயினாரும் வீற்றிருந்தார்
வீற்றிருந்த மங்கலர்க்கு வெண்சாமரை வீசி
அயனம் பொருந்தி யவரவரே நிற்கையிலே
ஏலமொடு வால்மிளகு எல்லோருந் தானருந்தி
அடைக்காயும் வெள்ளிலையும் அடைவுடனே

### மங்கலனார் கூற ஆனை சமர்த்தறியக்
### காக்காய் வதனன் செல்லல்

வீராதி வீரர்களே வீரவிளந் தாரிகளே
ஆனை சமர்த்தை ஆரறியப போறீர்கள்
காலி சமர்த்தைக் கருதிடுவோம் வீரர்களே



காக்காய் வதனன் கடுகெனவே தானெழுந்து
அழகா யரவமெல்லா மாராய்ந் தடிபார்த்து
ஓரிடமுங் காணாமலே ஓடிவந்து நிற்கையிலே
வில்லுக் குளத்தில் மேல்வளை குடாவினிலே
ஐந்நூறு காட்டெருமை அழுதழுது ஓடி வந்து
தண்ணீர் குடித்துத் தவிப்பாறி நிற்கையிலே
கண்டு பதுங்கிக் கண்குளிரப் பார்த்து நின்று
நின்றாலும் மெத்த நெடு நேரம் செல்லுதென்று
விரைந்து நயினார்க்கு விண்ணப்பஞ் செப்புவனாம்

### காக்கை வதனன் கண்டு வந்ததைக் கூறல்

ஓராட்டை வென்றாலோ எங்கள் நயினாரே
ஒரு நூறு போதுங்காண்
ஈராட்டை வென்றாலோ எங்கள் நயினாரே
இரு நூறு போதுங்காண்
மூவாட்டை வென்றாலோ எங்கள் நயினாரே
முந்நூறு போதுங்காண்
நாலாட்டை வென்றாலோ எங்கள் நயினாரே
நாநூறு போதுங்காண்
ஐந்தாட்டை யென்றாலோ எங்கள் நயினாரே
ஐந்நூறு போதுங்காண்

### மங்கலனார் காலி கட்ட கட்டளையிடல்

சிந்தை மகிழ்ந் துநயினார் திருமேனி பூரித்து
மந்துதனை எடுத்த மறுமந்து தான்போட்டு
வீராதி வீரரெல்லாம் வீதியிலே தானடைந்தார்
காலி கனைக்கக் கடுகியாள் ஓடுமென்றார்
குழுவதன ரோடிக் கூடவென்றான் காலிதனை
மீனைப் பிராந்து விரும்பி எடுத்தாற்போல்
வெள்ளி மலைப் பிராந்து விரும்பி எடுத்தாற் போல்
ஆளுக்கொரு மாடு அவரவரே கட்டுமென்றார்

### காலி கட்டியபின் காடு திருத்தல்

ஐநூறு மாடும் அணியாகக் கட்டியபின்
செம்மல் குருமல் சொல்லவொண்ணா மங்கலனும்
வல்லல் அலங்காரி நல்ல குருநாச்சி
சின்னவள்ளி கந்தி சிறியா விளங்காத்தாள்
என்று பெயரும் வகுத்துப் பறப்பட்டார் நயினாரும்
வெட்ட வெளியாக வெட்டுங்கோ காடதனை
தெற்கு வடக்காகச் சாயுங்கோ காலிதனை

## மங்கலனார் தேன் வெட்டுதல்

ஆலை விருட்சத்தை அண்ணாந்து பார்க்கையிலே
தெற்கே போன கந்திலொரு தேன்கூடிருக்குதென்று
தேனேறி வெட்டுமெனத் திரைவாகி யெல்லோரும்
எங்களாற் கூடாது எங்கள்நயினாரே
சிந்தை மகிழ்ந்து நயினார் திருமேனி பூரித்து
செப்புக் குடமெடுத்து சிறுகோடரி சொருகி
தேனேறி வெட்டியப்போ திரைவாகத் தான்பிழிந்தார்
தேன்பகிர வாருங்கோ காலிதனைத் தேடுங்கோ

## காணாமற்போன காலிகளைக் காக்காய் வதனன் தேடிவந்து சொல்லல்

காக்காய வதனனப்போ கடுகெனவே தான்பறந்து
அரவ மரவமெல்லாம் மாராயத் தடி பார்த்துத்
துறைகள் துறைகளெல்லாஞ் சோதித் தடிபார்த்து
ஓரிடமுமில்லாமல் ஓடிவந்து நிற்கையிலே
வில்லுக்குத் தெற்கே மேல்வளை குடாவினிலே
வெள்ளைக் கிடாவொன்று வெட்ட மறித்ததுவே
கண்டு பதுங்கிக் கண்குளிரப் பார்த்து நின்று
நின்றாலும் மெத்த நெடுநேரஞ் செல்லுதென்று
விரைந்து நயினார்க்கு விண்ணப்பஞ் செப்புவனும்
கால்நாலும் பார்த்தாலே எங்கள் நயினாரே
        கட்டிற்கால் சேர்ந்ததுபோல்
கண்ணிரண்டும் பார்த்தாலே எங்கள் நயினாரே
        கண்டுவம்மிப் பூவதுபோல்
கோடிரண்டும் பார்த்தாலே எங்கள் நயினாரே
        குத்து விளக்கதுபோல்
செவியிரண்டும் பார்த்தாலே எங்கள் நயினாரே
        சிறுசுழகு புடைத்தாற் போலெனச்

## வெள்ளைக் கிடா வெட்டியது

சிந்தை மகிழ்ந்து நயினார் திருமேனி பூரித்து
மந்துதனை எடுத்த மறுமந்து தோள்போட்டு
வீராதி வீரரெல்லாம் மேன்மைபெறவே நடந்தார்
வெள்ளைக் கிடாவை வெழுவிலே போடுமென்றார்
வெள்ளைக் கிடாவும் வெளுவுக்கு வாராது
குடிமறந்த கன்றும் வெளுவிற்கு வாராது
வெள்ளைக் கிடாவும் விரைந்துவர லுற்றதுவே
வேதங்க ளோதி நிற்க வெள்ளைக்கிடா வெட்டியதே
வீராதி வீரரெல்லாம் வீணிலே தான்மடிந்தார்



## சுவாதியம்மனிடம் அழிவுச் செய்தி கேட்டு அனுக்கிரகித்தல்

காக்கா வதனப்போ கடுகெனவே பறந்து
ஆனசுவாதியம்மைக் கன்புடனே செப்புவனும்
செப்பேணி யாலே சுவாதியம்மன் தானிறங்கிப்
பச்சைத் தேரேறி பரிவாகக் கை தொழுது
எமலோகந் தான் கடந்து அப்பால் வருகையிலே
வெள்ளைக் கிடாவும் விரைந்து வரலுற்றதுவே
வேதங்க ளோதி நிற்க வெள்ளைகிடா மடிந்ததுவே
பாற்பொங்க லுண்டுபண்ணிப் பரிவாகக் கைதொழுது
எல்லோரையும அழைத்து எதிர்கொண்டு போகையிலே

## சுவாகியம்மன் வதனமாரைப் பட்டிக்காரர்களாக மாற்றுதல்

எச்சில்பட்ட நீங்களினி இங்குவரக் கூடாது
பட்டிக்குப் பட்டி பாலமிர்த முண்டுபண்ணி
எல்லாமை செல்லாமை எல்லோர்க்கு முண்டுபண்ணி
எல்லோரும் நில்லுமென்று ஏகினாள் சுவாகியம்மன்

மேற்கூறிய நிகழ்வினால் பட்டிக்காரர் எனப்படும்ஒரு பகுதியினர் தோன்றிய வரலாறு சொல்லப்படுகிறது, வெள்ளைக் கிடாவை எதிர்க்க சக்தியற்றுப் போன வதனமாரைக் காத்த சுவாதியம்மன் அவர்களை தன்னுடன் அழைத்து செல்லத் தகுதியற்றவர்களாகக் கண்டு இங்கேயே பட்டி கார்த்து பாருக்கு நன்மை செய்யுங்கள் என்று ஏகினாள். வதனமார் எனும் தேவ அம்சம் பொருந்தியவர்கள் தேன் அருந்தும் ஆசைகொண்ட் தங்களது கவலையீனத்தால் அம்மனால் சபிக்கப்பட்டு பட்டிக்காரர்க ளாயினும் தங்கள் முன்னோர்கள் வதனமாரே என்ற நம்பிக்கையில் இன்றும் அவர்களை வழிபட்டு வருகின்றனர்.

=============

# 3. வதனமார் குழுமாடு கட்டுக் காவியம்

இதுவரை வதனமாரின் அவதாரம், அவர்களின் தொகை, வெள்ளைக் கிடாவின் அட்டூழியம் பற்றிய சில செய்திகளை முன்போந்த பகுதிகளில் பார்த்தோம். இந்தப் பகுதியில் அவைபற்றிய மேலும் பல தகவல்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவற்றுள் வதனமார் இலங்கைக்கு வந்தது பற்றியசில சேதிகளையும் காண்கிறோம். அவர்கள் வந்த வழியும் ஈற்றில் அவர்கள் மட்டக்களப்பில உள்ள நாதனை வெளியெனும் எனுமிடத்தில் நகரமைத்த் ஆட்சி செய்த செய்தியையும் காண்கிறோம். மண்முனைப் பற்றில் நாதனைக் கண்டம் என்றொரு வயற் செய்கைக் கண்டம் என்றொரு பகுதி இப்போதும் உள்ளது.

வாழத் தெரிந்துகொண்ட இடம்,காடும் காடுசார்ந்த முல்லை நிலமாக இருந்ததையும் அவர்களின் செல்வம் மாடு வளர்த்தலிலே தங்கியிருந்ததையும நாம் இந்தச் செய்யுள்களால் அறிந்து கொள்ளலாம். காவி என்பது குழுமாடுகளைக் குறிக்கும். காட்டில் எதேச்சையாக வாழும் பசுக்களையும் எருமைகளையும் இப்பெயரிட்டு அழைப்பர். வதனமாரின் நடபடிக்கைகள் இவற்றை மடக்கிப் பிடித்து வீட்டு மிருகங்களாக்கி அவற்றை வளர்த்தலிலே செல்வதைக் கொண்டு வதனமார் இனத்தவர் பாற்பண்ணை பராமரிப்பாளர் என்பது புலனாகின்றது

### காப்புச் செய்யுள்

சீருலவு கமலமலர் வாவியிடை சூழவளர்
செம்பொனு லயமருவு திருவயோத் திப்பதிக்
கேருலவு விறுமகுல மகிழ்வுய ரரிராம
ரின்பமுறு மங்கலர்மே லினியபுகழ் பாடப்
பாருலவு நீடுபுகழ் மேவி வளர் பாரதம்
பைம்பொன்முனி கூறவளர் செம்பொன் வரைமீது
கூருலவு கொடெடுத் தெழுதரிய விகடதடக்
குஞ்சரமு கன்சரணம் நெஞ்சில்மற வேனே

### மக்கள்செல்வம் வேண்டி விரதமிருத்தல்

சரணபரி புரகமல வனிதையந் தணர்குலத்
தையலொரு பேதைதிரு மால்தனைநினைத்து



பிரணவ வமிர்தகலை யோதுமறை தேருமுனி
பேசரிய சொற்படி பெருந்தவ மியற்றி
அருணன் நிகர் கெருடன்மிசை பஞ்சாயுதத்துடன்
ஆதி நாராயண சுவாமிவந் தருளக்
கிரணவொளி சேர்புதுமை மலரடி பணிந்தாள்
கேசவர் மகிழ்ந்துநற் கிருபை செய்தனரே 2

### வதனமார் அவதாரம்

வானவர்க ளாலுமுடி யாததவம் நீ செய்த
வண்மைபுக லென்னமறை மங்கை யுலகிற்பாய்
ஏனவுரு வாயுலக மீடேற்றி யாழும்
ஏந்தலே சிறுவரை யெனக் கருள்செய் யென்னக்
கானமலர் மேனியன் முகுந்தனருள் செய்து
கமலமலரைக் கன்னி கைதனி லளிப்பத்
தானதன்ம மீறியுயர் சைவநெறி வாழத்
தருமமங் கலதேவ நயினார் பிறந்தார் 3

நவமது புரிந்துபின் மனமது மகிழ்ந்து
சந்தோஷமாகவொரு செந்தாமரைப் பூ
அவசரம தாகவே அவள் கையிற் கொடுக்க
ஆயினை அருந்தவே கெற்ப வுற்பத்தியாய்
சிவகிருபை தங்கியே நூற்றியறு வதனர்
சேரவே யுதரத்திற் செழிப்பா யிருந்து
நவலனொழு நாயன்மார் திங்களொரு பத்தினில்
நயினாருடன்கூடி யேபிறந்த தனரே 4

### மங்கலரும் வதனமாரும் வளர்தல்

பிறந்தருளு மங்கல ருடன்வதன மாரும்
பேசரிய நாளும் நிறை பிறைபோல் வளர்ந்து
சிறந்த புகழ் மேவிவளர் ரெத்தின குண்டலமுந்
திருவரை ஞாணுடன் செம்பொன் முத்தாரம்
மறங்குலவு தண்டமொடு வல்லயஞ் செல்லை
மழுக்கயிறு கோடாலி வாள்பொல் லெடுத்துத்
திறங்குலவு ரணசூர வீரகேசரி யான
செல்வமிகு நயினார் சிறந்து வீற்றிருந்தார் 5

### வதனமார் ஆட்சி

தாரசைய மணிமகுட கிரணவொளி வீசத்
தயங்குமுப் புரிநூ லிலங்கவொளிர் சரணம்
வீரசங் கிலியசையத் தரியலர்கள் வெருவ
விண்ணுடர் புகழவரு கணநாதர் பரவக்

காரணம தானமங் கலதேவ ருடனே
கருணைசெறி வதனமார் கருதிவளர் போதில்
ஆரண விதிப்படியோர் வெள்ளைக்கடா வந்து
அயோத்திமா நகர்தனி லயர்ந்து நின்றதுவே 6

**வெள்ளைக்கிடா கண்டுவந்து மங்கலனிடம் சொல்லல்**

நின்றதை யறிந்து சிலர்கண்டு மனமேங்கி
நேசமுட னே நயினர் பாதமலர் தொழுது
கண்டறியோம் நாங்களொரு வெள்ளைக் கடாவந்து
கன்னல் செந்நெல் கதலி காய்வன மழித்து
மிண்டிவரு வோர்களை வெருட்டி யமராடி
வீரமுடனே பதியழிக் குதிது வெனவே
நன்றெனவே வதனமா ரனைவருஞ் சூழ
நயினு ரெழுந்து வெண்பகடுகண்டனரே 7

**மங்கலனும் வதனமாரும் கிடாச் சாய்த்தல்**

கண்டவர்கள் மனம் வெருவ வெடிவால் சுழற்றி
காயச்சுருக் கொண்டு காரிடிபோல் முழங்கிச்
சண்டமா ருதமெனப் பகடுமுன் செல்லத்
தானைபல பின்செல்ல நயினு ரெழுந்து
முண்டாசுப் பாரசடை பாதமலர் தொழுது
முன்போன வெள்ளைக் கடாவைத் துரந்து
பண்டுநம் ராமனுங் கடல்கடந்ததுபோல்
பரிவான தென்னிலங் காபுரியில் வந்தார் 8

பிறந்தே வளர்ந்தே பெலத்ததிற மாகிப்
பேய்மூலை யருந்துபெரு மானரு ளினலே
சிறந்தமங் கலவதன மார்களுங் கூடி
தெய்வவெள் ளெருமையைச் சென்று சாய்த்திடவே
துறந்தமுனி நாதர்தன் பகட்டைத் துரத்த
சொல்லுமுனி யெங்களுக் கேயுரிய தென்ன
பறந்திளைய நம்வதன மார்களும் வந்து
பகடது பறித்திலங் கைக்கு வந்தனரே 9

**இலங்கைக்கு மங்கலனர் பரிவாரங்களுடன் வருதல்**

வந்தபின் கந்தாளை கவடாலை மின்னேரி
வாகான கோமாரி வதனவொளி நாவலூர்
சந்தம் மிகுந்தருளு கந்தைமலை முருகவேள்
தங்கிவளர் கதிரைமலை வலவை மாகாமம்
கொந்தலர் தடங்கடொறு மாராய்ந்து பார்த்துக்
கூறரிய மாவெலிக் கங்கை யாறதனில்



சிந்தைமகிழ் வெய்தியே மதுரை நிழல்தன்னில்
ஸ்ரீ நமோ நாராய ணவென விருந்தார் 10

**காலி கண்டறிந்துவரச் சொல்லல்**

இருந்தருளு நயினர் தனக்குவெண் சாமரை
இரத்னவகை காளாஞ்சி இருபாலு மேந்தப்
பொருந்தி வளர்பொன் னடப்பக்காரர் தானும்
போற்றரிய வதனமார் நாற்றிசையுஞ் சூழத்
திருந்திவரு போதிலவ ரைப்பார்த்து நயினு
செப்பரிய எருமைக் குழு காலியா ராய்ந்து
தெரிந்துவர வேநல்ல வதனமார் தன்னைச்
சீக்கிர மனுப்புமென வேயருள் புரிந்தார் 11

**பாலாவதனன் பார்த்து வந்த சேதி உரைத்தல்**

அருள்செய்யும் பணிவிடை கண்டுபா லாவதன
னப்போது வாய்வேகி மனவேகி யெனவே
இருவர்தனை விட்டவர்கள் எங்கெங்கு மேகி
ஏற்றரிய வெடிமுத் தங்கண்டு மீண்டு
திருவருள்செய் நயினர் தனக்குமுன் சென்ற
செப்பரிய வேடிகள் திரண்டொரு வழிக்கே
பருவரை யிற்புகழ்முத் தஞ்சித்து மேடையில்
பார்த்து வந்தோமென்று தோத்திரஞ் செய்தார் 12

**மங்கலனும் வதனமாரும் மாடு பிடித்தல்**

செய்தியை அறிந்துநயி னர்மன மகிழ்ந்து
செம்பொன் முத் தாரவகை சேலைகள் களைந்து
கைதனிலே பொல்லெடுத்துக் கச்சை கட்டி
கருதரிய திருநீறு திருநாமம் வீருய்த்
துய்யபுகழ் கூற்றறு பதுவதன மாருந்
தோராத வெற்றித் துவாலைபோல் லெடுத்து
வையக மதிக்கவே விற்குடா வெளிதன்னில்
வாகாக வேபோய் வளைந்து நின்றனரே 13

நின்றவுட னேவதன மார்கள் சில ரோடி
நேசமுடனே காலித் திரள்களை வெருட்டி
ஒன்றோடொன் றெட்டாமற் செந்தாள் பறக்க
ஓடியெதிர் வருபோது ஓர்மித்து நின்று
கன்றுடன் எருமைகுழு நாகுபல நாம்பன்
கறையடித் திரள்போல வருபகட தெல்லாம்
சென்றுசென் றேயவர்கள் ஆளுக்கொரு மாடு
சேர்த்துவைத் தேவெழுப் பூட்டிவந் தனரே 14

### நாதனையில் நகரமைத்து இருத்தல்

வந்தவுட னேநயினுர் திருமனது பூரித்து
வாகான வதனவெளி தன்னிலொரு சாரில்
சிந்தைமகிழ் வெய்திஞேர் வந்தின திருந்து
தேசிகர் முகிர்த்த தமிழது தெரிந்து
கொந்தலர் தரிக்கு மெருமைக்கு நல்லபேர்
குமரிகுடி தாங்கிகுறு மற்சேர் மலமங்கல்
விந்தைபெறு திருநாமம் வெவ்வேறு நல்கி
வீறுபெறு நாதனைமா நகர்தனி லிருந்தார் 15

நகரமதில் வீறுபெறு சந்தனச் சோலையும்
நளினமல ரோடை செறி நல்ல பூங் காவும்
பகரரிய நூல்பசும் பொன்ஞ லிழைத்த
பாய்தனை விரித்ததின மேலெழுந் தருளிக்
சிகரவருள் போல்வதன மார்கள் புடைசூழத்
தேவதே வாதிகள் சிறந்துமன மகிழ
அகரமுத லெட்டெழுத் தோதியே நயினுர்
அரியசிங் காசனத் தனில்வந் திருந்தார் 16

### வாழி

திருந்துமங் கலவீர வதனமார் வாழி
சிவசமய மைந்தெழுத் தெப்போதும் வாழி
பொருந்தபூ சனைசெய்த கட்டாடி மார்வாழி
பூலோக நற்பதிகள் நீடுழி வாழி
அருந்தவஞ் செய்கின்ற முனிவோர்கள் வாழி
அழகுசெறி மட்டக் களப்புநகர் வாழி
பருந்துவா கனமீ தெழுந்துவரு கின்ற
பச்சைமால் பொற்பாதம வாழவா ழியதே 17

==================



# ௪. வதனமார் தேன்வெட்டுக் காவியம்.

ஆதி கால மனிதர் ஆடையின்றித் திரிந்தனர் அடுத்து இலை குழைகளைக் கட்டி மானத்தை மறைந்தனர். பின்னர், மரப்பட்டை, தோல், சணல். சணற் பின்னல், நூல் நூலால் செய்த புடவைகளால் தங்கள் உடல்களை வெட்பதட்பத்திலிருந்து காத்தனர் என்று சொன்ஞல் நாங்கள் வெட்கப்பட்டுக் கூனிக் குறுகுவதில்லை. ஏனெனில் இப்போதுள்ள மனித இனம் இத்தகைய பல கட்டங்களைக் கடந்துதான் தற்போதைய நிலையை அடைந்துள்ளது. இதை ஒப்புக்கொள்வதால்தான் எங்களிலும் நாகரீகம் குறைந்த் நிலையில் வாழ்ந்த எங்கள் முன்ஞேர்களைப் போற்றிப் புகழ்கிறேம்..அவர்களின் சந்ததியினர் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறேம். வம்ச மதிப்பைக் கட்டிக் காக்க வாழ்கிறேம்.

வேட்டையாடிய காலம் மாறியபோது, பண்டைக்கால மக்கள் அலைந்து திரிந்த காலத்தொழிலாக மந்தை மேய்த்தனர். பின்பு பயிர்ச் செய்கை செய்யத் தொடங்கியதும் நிலையாக ஒரு இடத்தில் தங்கி வாழ்ந்தனர். பின் இந்த இருவித சீவனேபாயத் தொழில்களும் பிரிக்கப் பட்டன. எனினும் இப்போதும் மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கையில் கால்நடை வளர்த்தலும் கமத்தொழிலும் இணைந்தே வளர்கின்றன.

தற்போது கமத் தொழிலைப் பார்க்கும்போது வயல்களில் உழுது, சூடுபோட்ட மாடுகளின் நாலு கால்களும் உழவு இயந்திரத்தின் சக்கரங்களாக உருமாறி உள்ளதைக் காண்கிறேம்.. அருவி வெட்டலில மாத்திரம் இன்னும் இயந்திரங்கள் நுழையமுடியாமல் தவிக்கிறது. ஏனெனில் வயலில் வரம்புகள இடப்பட்டு வரவைகள் பிரிக்கப்படும் முறை எனலாம இருபது அடி அகலமும் இருபதடி நீளமும் கொண்ட வரவையின் நாலு பக்கமும் சூழவர இரு அடிப் அகலப் பரப்புள்ள செய்கை நிலம் வரம்புக்காக ஒதுக்கப்படுகிறது. அதஞல் செய்கை பண்ணப்படும் நிலம் 25 சதவீதத்தால் வீணுக்கப்படுகிறது. அடுத்தது எல்லை வகுக்கும்போது இடப்படும் வரம்புகள் இடையிடையே குறுக்கிடுவதால இயந்திரம் மூலம் அருவி வெட்டுவது இடர்பாட்டைத் தருகிறது. வளர்ச்சிபெற்ற மேல் நாடுகளில் வரம்பிடப்படாத பரந்த வயல் செய்கை முறை கைக்கொள்ளப்

படுவதால் நீர்ப்பாசனம், கிருமி, நாசினிகள் தூவுதல், உழுதல், விதைத்தல் அருவி வெட்டல், தானியம் தூற்றல். வைக்கோல் கட்டுதல், என்பன இயந்திரத்தின் பன்முக இயக்க அமைப்பால் இலகுவாக்கப் படுகிறது.என்பது மனதிற் கொள்ளற்பாலது.

இப்போது வேழாண்மைச் செய்கை இயந்திர மயப்படுத்தப்பட்டு வருகிறது. மாடுகளை வளர்க்கும் பட்டிகளும் பாற்பண்ணைக்கு பால், பாலுணவு வழங்கும் சிறு பண்ணைகளாக மாறி வருகின்றன. இதனால் பழையமுறைகளும் சம்பிரதாயங்களும் சமயஞ்சார் சடங்குகளும் கைவிடப் படுகின்றன. இதனால் இந்தப் பண்பாட்டுக் கோலங்கள் நம்மி லிருந்து மறைந்துபோகும் நிலை வந்துள்ளது. இந்த நேரத்தில் பண்டைப் பராம்பரியங்களை நினைவுபடுத்தும் அடையாளங்களை ஆவணப்படுத்தும் நோக்குடன்தான் இவ்வித ஆய்வுகளும் பதிப்புகளும் அவசியப்படுகின் றன.

இலங்கையில் காடுகளில் வாழும் வேடர்கள் குமார தெய்வ வழி பாடுள்ளவர்கள். அதுபோல இறந்த முன்னோர்களின ஆவியை வணங்கு பவர்கள், இத்தகைய தருணங்களில் அவர்கள் பாடும் இரு பாடல்களைத் தமிழ்ப்படுத்தி இங்கே தருகிறேன்.

**மூதாதைகளை வணங்கும் பாடல்;**

**மா மினி மாமினி மா மினி தெய்யா எனத்தொடங்கும் பாடல்;**

என் மூதாதே என் மூதாதே என் மூதாதே என் தெய்வமே
நாங்கள் உடும்பைச் சுட்டெடுப்போம்
சுட்ட உடம்பின் சுவையெடுப்பாய்
சுட்டவுடனே ஈரல் எடுப்பேன் படைப்பேன்
பனித்துளி பூமியில் விழுந்ததடா
பாடுங்கள் எருமையில் ஏறிச் செல்வோம்

**தேனெடுக்கும் பாடல்; வோரி வோரி செல்லலா மாகே**

தூரத்து மலையாம் பல்லி கடுதலயா
பூத்த மலரில் தேனெடுத்து வருவாம்
எடுத்த தேன் கொடுத்து இருலாக்குமாம்
தேனெடுக்க வந்தேன் கொட்டாதே
தேவையிலாத் தொந்தரவு தந்திடாதே
நோவில்லாமல் தேனெடுப்பேனே

இந்தவகையில் வதனமார் தேனெடுக்கும் நிகழ்வைச் சித்தரிக்கும் பகுதி இது.



# காவியம்

**வதனமார் 160 பேர் பிறத்தல்**

சீர்மேவு வேதியர் குலத்திலொரு மாது
செங்கண்ணெடு மால் திருப் பாதமலர் போற்றி
பேர்மேவு பிள்ளை வரம் வேணுமென் றோதப
பெருமாள் வரத்தினாற் பெற்ற பிரதாபன்
தார்மேவு திருமார்பன் அந்தணராகிச்
சங்கைபெறு மங்கலர் பிறந்த சமூகத்தில்
பார்மேவு புத்திரர்நூற் றறுபது வந்தவரும்
பராசரும் வந்து சூழ்ந்தடி பணிந்தார் 1

**மங்கலனூர் சாவாறில் ஆட்சி புரிந்தது**

பணியா பரணமும் பொன்முத்து மாலை
சரப்பணி பொன்னெளி பதக்கமொடு சங்கிலி
அணியாக வேளடுத் தங்கங்கு பூட்டி
அழகான பட்டாடை சட்டைசக லாத்தும்
கெணிதான மதரூபன் கீர்த்தி ப்ரதாபன்
இருடையுட னேயலங் காரவடி வாகி
மணிமாலை யும்முன்கை வாகுபுரி வளையலும்
வகையுடைய வதனமா ரடிபணிந்தனரே 2

வதனகம லம்போ விளந்தாரி வீரர்
வரிசைபெற வேமழு மந்துகோ டாலி
இதமான கைகட்டுத் தொங்கலணி வில்லம்பு
இன்பமுட னேபல வாயுத மெடுத்து
பதனமுட னேநெடும் படைமனிதர் சூழவரு
பாங்குடனே சாவாறு தனிலெழுந் தருளி
இதமுடனே நல்லநிழ லென்றுநயி னாரும்
இனிதாக வீற்றிருந் தருளது புரிந்தார் 3

**காலி கண்டு வாவென ஆணையிட்டார்**

வீற்றிருந் தேகாலி பார்த்துவா வெனவே
என்றொரு மொழி பகர வன்று நயினாரும்
ஏற்றமுட னேபாலா வதனனு மெழுந்து
இப்போது வாறேமென் றொருநொடியிற் சென்று
காற்றெனவே நாலுதிக் கெங்கனு மோடிக்
காலியடி பார்த்துவந் தாலித்து மீண்டு
ஏற்றமுட னே காலி குளிக்கிறது கெங்கை
இப்போது கண்டோமென் றொரு நொடியில் வந்தார் 4

## காலி பிடிக்கப் போதல்

ஓடிவந் தேகாலி கண்டதை யுரைக்க
உற்றதிரு மங்கலரும் மெத்தமகிழ் வாகி
ஆடியே யவர்களெல் லாருமே கூடி
அவரவ ரேகச்சை கட்டிப்பொல் லெடுத்து
கூடியே வீரவிளந் தாரி வதனமார்
கொண்டாடி மந்துபொல் கோடாரி யெடுத்து
தேடிவடி வாகத்தி ரிந்துநயி னாருஞ்
சீக்கிரமே காலிக ளைத்தன ராங்கே 5

ஆங்கவர்க ளாலாக் கிளைகளது போற்கூடி
ஆளுக்கோர் மீனெடுத் தருந்தினது போல
தேங்குகஸ் தூரிமணம் வீசுமணி மார்பனும்
திக்கெங்கு மாளுக்கோர் குழுமாடு பிடித்து
தாங்குதலை கால்மந்து பாய்ச்ச இறுக்கித்
தயவாக மதுரைநிழல் தனிவெழுந் தருள
பாங்குடன் தேன்கூடு கண்ட நயினாரும்
பரிவுட னேறிவெட் டிப்பணிய வந்தார் 6

## நயினார் தேன் எடுத்தல் வெள்ளைக் கிடாவின் தொல்லை

வந்தபின் நயினார் மனமிக மகிழ்ந்து
வாகுடன் தேன்பகிர வாருமென வோத
இந்தநிழ லில்வதன ரெல்லோருங் கூடிச்
சிங்கார மாகவே யாங்கவ ரிருக்க
மந்தார மாமுகில் போலே புயத்தான்
மாடுமேய்க் குமிடைய னோடியே வந்து
விந்தைசெறி வெண்டா மரைத்தலைய னான
வெள்ளைக் கிடாவந்து வீரிடுகு தென்றான் 7

## வெள்ளைக் கிடாவடக்கப் பறப்படுதல்

வீரிடுகு தென்றவனு மோதுமொழி கேட்டு
யொப்புடைய நயினாரும் வீரரை யழைத்து
ஓதியே குழல் கச்சை யொதுக்கியே கட்டி
ஓம்நமசி வாயமென் றுருமந்தெடுத்துச்
சோதிமறை யவர்களு மப்போ துவங்கித்
துய்யதொரு வெள்ளைக் கிடாவைத் துரத்தி
ஆதிநெறி மாலருளால் நீதிமங்கலரும்
அப்போது தபபாமற் படுத்தா ரடுத்தார் 8



## அடக்க முற்பட்டவர் அழிந்தார்

படுத்தார் தலைமந்து பாய்ச்சிமுன் போனார்
பதைக்கப் பதைக்கப் பகட்டுக் கடாவை
அடுத்தே சிரத்தைக் கரத்தை உடைத்தார்
அழித்தா ருருண்டார் அனைவர்களும் மாட்டால்
பிடித்தானே வாலைக் கரத்தா லிடையன்
பேய்க்கோல் நரம்பைப் பிடிக்குமுன் போட்டு
எடுத்தார் கைக்கத்தி தொடுக்க வலைக்க
இழுத்தா ரறுத்தார் இறந்தார்கள் மாட்டால் 9

## தாளைக் குளத்தில் நாயன்மார் பூசை

காலிமேய்க் குமிடை யன்பட்ட பின்பு
கண்ணனு மெழுந்துசில வானமுகில் மேலே
ஆலிப் புடனே யிலங்கைக் கதிபனென்
றுசாங் குழலுமோ ரம்புங் கொடுத்து
நாலுதிக் குங்காவ லாகவிளை யாடி
நயமாக வேயுலகம் மிகவாழ்க வென்றே
காலியரு ளாலேகந் தாளைக் குளத்தினிற்
கருதரிய நாயன்மார் பூசைகொண் டனரே 10

## வதனமார் பூசையின் பலன்

அருள்கொண்ட நாயன்மார் தன்னைநினைந்து
அன்பாக வேபூசை பொங்கல்மடை செய்வோர்
திரள்கொண்ட பூதப் பிரேதப் பசாசி
சிறந்ததோர் பில்லி வஞ்சனை சூனியம்
அருள்கொண்ட வதனரைப் பகடுகொண் டரியபுலி
வாகான வதனமா ராணைசொல் வோர்க்கு
ஒருநிக்கு மனுகாம வொதுங்கி யோடிடுமே
ஒதரிய வதனமா ருண்மை யுல கோர்க்கே 11

## மங்களம்

திருவாழி மறைவாழி நாலுவே தமும்வாழி
செப்பரிய மன்னர்செங் கோல்நிதம் வாழி
கார்வாழி காவியம் பாடினோர் வாழி
கட்டாடி மார்வாழி கன்னிமார் வாழி
அருந்தவஞ் செய்கின்ற முனிவோர்கள் வாழி
அழகுசெறி மட்டுக்க ளப்புநகர் வாழி
பருந்துவா கனமீ தெழுந்து வருகின்ற
பச்சைமால் பொற்பாதம வாழவா ழியவே 12

=================

# 5. வதனமார் ஊர்சுற்றுக் காவியம்.

வதனமார் இந்தியாவிலிருந்து வந்து இலங்கை சேர்ந்து, கிழக் குத்திசை நோக்கிச் சென்று அங்கிருந்து தெற்கு வழியாக பானமைவரை சென்றனர். பின்பு அங்கிருந்து வடக்கு நோக்கித் திரும்பி நாதனை வெளியில் நகரமைத்து வாழ்ந்தனர். இந்தச் செலவைக் கூறும் பகுதி வதனமார் ஊர்சுற்றுக் காவியம் எனப்படுகிறது. இப்பாதைகளை நோக்கு மிடத்து அவை காடும் காடுசார்ந்த புல்வெளியும் உள்ள முல்லை நிலமாக இருப்பதைக் காணலாம். மந்தை வளர்ப்பதையும் , குழுமாடுகளைப் பிடித்து மந்தைகளைப் பெருக்குவதையும் சீவனோபாயமாகக் கொண்ட இவர்களுக்கு இத்தகைய இடங்களே வாழ்விடமாக அமைந்ததில் வியப்பில்லை.

இவர்களின் வருகை எக்கால கட்டத்தில் நிகழ்ந்தது என்று அறிவதற்கு இலங்கை வரலாற்றில் ஏதேனும் தகவல்களை அடையாளம் காணமுடியாதிருக்கிறது. மட்டக்களப்பு மான்மியத்திலும் வதனமார் என்ற செய்தி இல்லை. ஆனால், அமரசேனன் சரித்திரம் - மறவர் வருகை என்ற பகுதியில் பின்வரும் செய்தி ஒன்று தரப்பட்டுள்ளது

' இராமர் நாட்டு மறவர் குலத்து இராச வம்சத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் தங்கள் மணவாளர்களுடனும் சிறைத் தளங்களுடனும், வவனியர் குலத்து குருகக் குடும்பம் ஐந்தும் சேர்ந்து மட்டக்களப்பின் பரிசுத்தங்களை அறி யும்படியும் வைதூலிய சமயத்தை மாற்றி அரிநமோ என்னும் நாமத்தைப் போதித்து வைக்க வேண்டுமென்றும் கம்பர் இயற்றிய இதிகாசப் பிர தியை எடுத்து. இராம நாடுவிட்டு சேதுதனில் ஸ்நானம் செய்து. இரா மேஸ்வர தெரிசனை கண்டு ஒரு ஓடத்தில் ஏறி மன்னாரில் இறங்கி, திருக் கேதிஸ்வரம், கோணேஸ்வரம் தெரிசனை கண்டு ஒரு இடத்தில் கொட்டியான் புரத்தில் வந்து மட்டக்களப்பில் அமரசேன மன்னனைக் கண்டு தங்கள் வரலாற்றைக் கூறி வன்னிச் சீமாரென வி'ருது பெற்று கலைவஞ்சி ஓர் ஊரிலும், மங்கிஅம்மை ஒரு ஊரிலும், செட்டிச்சி ஒரு ஊரிலும், மகிழரசி ஓர் ஊரிலும். இராசம்மை ஓர் ஊரிலும், வீரமுத்து ஒரு ஊரிலும், பாலம்மை ஓர் ஊரிலும் தங்கள் தங்கள் மணமகனுட னிருந்து வந்த சிறைகளை கொண்டு கமத்தொழில் செய்து வாழ்ந்தனர்." என்பதே அந்தச் செய்தியாகும்.



அமரசேனன் காலம் ' கலியுத்த மூவாயிதது நானூற்றி அறுபத் தாறே ' என்பதால் இது தற்போத் கலிவருடம் 5102 அதிலிருந்து 3466 கலிவருடங்களைக் கழித்தால் கி.பி 368 வருடங்களாக இருக்க வேண்டும். இது வரலாற்றுச் சாத்தியமறறது. அத்துடன் கம்பரின் இதிகசாசம் (கம்பராமாயணம்) கொண்டு வந்ததென்று இருப்பதும் இந்தக் காலத் துடன் ஒத்து வராது. ஏனெனில் கம்பராயாணத்தின் காலம் மிகவும் பிந்தியது.

அடுத்து இவர்களுக்கும் வதனமாருக்கும் தொடர்புகள இருப்பது மூன்று காரியங்களால் மட்டும் ஒன்றுபடுகிறது. முதலாவது வைணவ சமயம், இரண்டாவது ஏழு கன்னியர் வருகை, மூன்ருவது இவர்கள் மட்டக்களப்பினைச் சேர்ந்த பாதையும் வதனமாரின் பாதை களும் ஒத்திருப்பது. . இவற்ருல்மட்டும் வதனமாருக்கும் இவர்களுக்கும் தொடர் புண்டு என்று நிட்சயிக்க முடியாதுள்ளது.

எனினும் இந்த மறவர் குலத்தவர்கள் வந்து குடியேறிய இடங்க ளுக்கு இவர்களின் நாமம் இடப்பட்டது எனக்கொண்டால் கலைவஞ்சி - களுவாஞ்சி, மகிழரசி - மகிழூர், பாலம்மை - பாலமுனை, செட்டிச்சி - செட்டிபாளையம், வீரமுத்து - வீர முனை, எனும் ஊர்களின பெயர் வரலாறு கிடைக்கும்போல் தெரிகிறது.

## காவியம்

### இறை வணக்கம்.

திருமரு வயோத்தியம் பதிதனிலி ருந்து
 செப்பரிய காஞ்சிமா நகர்தன்னி லெய்தி
மருமருவு மங்கலரு டன்வதன மார்சேர்ந்து
 வந்தனர் மாயவன் தன்புகழ் வகுத்த
எருதேறு மீசரிட மாகிவளர் கின்ற
 ஈசுபரி தன்கிருபை பெற்றருள் சிறந்த
கருமாது விகடதட வீரமுங் கண்ணன்
 கணபதியை யொருபோதும் மனதில் மறவேனே

### வதனமார் கதிரையம்பதி நோக்கி வருதல்

மறவாம லந்தணர் குலத்தவ தரித்து
 மதயானை எருமைகுழு மாடுகள் பிடித்துத்
திறமான வயதுமே யீரெட்டுச் சென்றபின்
 செப்பரிய மந்துபொல் கண்டகோ டாலி

நிறமான பட்டுடன் சட்டை சகலாத்தும்
நீள்துளப மாலைஅணி பூஷண மணிந்து
குறமாது மணவாளர் கதிரையம் பதிநகர்
குறித்தவர் மனத்தினில் நினைந்துவந் தனரே 2

## வதனமார் கன்னிமாருடன் திருகோணமலையை அடைதல்

வந்துமது ராபுரியில் நின்றவதரித்து
வைகைதனில் நீராடி யேமனம கிழ்ந்து
விந்தைசெறி கும்பகோ ணந்தன்னில் வந்த
மேன்மையுட னேமூழ்கி நன்மைபெற வேதான்
இந்தவகை யெண்ணியவர் சந்தோஷமாகவே
இன்புற்று ராமே சுரந்தன்னில் வந்து
செந்தமிழ் சிறந்துவளர் கந்தமா பருவதந்
திரிகோண மலைதன்னில் வந்தவ தரித்தார் 3

வந்தவ தரித்தவர்கள் தன்னுள மகிழ்ந்து
வளமையுள நற்பதிக ளெங்கணு நிறைந்து
கந்தமலர் மாதுளை செவ்வந்தி செண்பகங்
கனகமலர் நிறைவாவி கண்டவ ருகந்து
சிந்தையுட னேயெடுத் தனைவரு மணிந்து
சீருலவு கன்னிமா ரும்வதன மாருஞ்
சந்தோஷ மாகவே கந்தாளைக் குளத்தில்
தன்மனம கிழ்ந்தவர்கள் அருள்புரிந் தனரே 4

## வதனமார் தெற்கு நோக்கிச் செல்லல்

அருள்புரிந் தேகொட்டி யாரநகர் கிளிவெட்டி
ஆனதம் பன்கடவை தம்பல காமம்
தருவளரு கந்தைமலை சலவைபா னகையுடன்
தமிழ்பெருகு நாவலூர் நாகமுனை அறுகாமம்
எருமைமத யானைகள் பிடித்து விளையாட
இதமான தலமென்று அவர்மனதி லெண்ணி
வரிசைபெற வேயவர்கள் அனைவரும் வந்து
வதனவெளி தன்னிலே இனிதிருந் தனரே 5

## ஒரு பகுதியார் வதனவெளியில் இருந்து வடக்குக் கரையோரம் நோக்கிச் செல்லல்

இனிதிருந் தேசிறிது பேரங் கிருக்க
இன்பமுட னேசிறிது பெரெழுந் தருளித்



தனிமைபெற வேதிருக் கோவில் நகரெய்தித்
தம்பட்டை மட்டிநகர் தளைகைக் குடாவும்
கனிபால னையதமிழ் பயில்துடி பிடிநடைக
கன்னியர்க ளுறைகின்ற காரைநக ரெய்திப்
பனிமலர்கள் சொரிகின்ற கல்முனையில் வந்து
பரிவுசெறி யாலநிழல் வீற்றிருந் தனரே 6

## நாதனைப் பதியில் அமர்தல்

வீற்றிருந் தேயெழிய மானிடர் தமக்கு
வினைதுயர கற்றிநல்ல வௌிகள்விளை வித்து
கீர்த்திபெற வேபூசை பொங்கல்கள் விரும்பிக்
கிருபையுட னேயவர் தமக்கருள் புரிந்து
போற்றிசெய் தேநல்ல தோத்திரஞ் செய்து
பூலோக மெங்கணும் வாழவென் றேதான்
நாற்றிசைகள் புகழ்கின்ற நாதனைப் பதியில்
நாச்சிமார் கல்லடிநற் பதியெனவி ருந்தார் 7

நற்பதிக ளென்றவர்க ளொப்பமுட னேதான்
நளினமலர் கமழ்வாவி அதிகதல மென்று
பொற்பிளவை நீலநவ ரெத்தினம ணிந்து
பொன்னினரை ஞாணுடன் சட்டை சகலாத்தும்
செப்பமுட னே யெடுத் தனைவரு மணிந்து
சீர்மையுள்ள கன்னிமா ரும்வதன மாரும்
எப்பொழுது மித்தல மிரட்சிப்போ மென்று
எல்லோரும பொஙகல்மடை கொண்டிருந் தனரே 8

மடைகொண் டிருந்தவர்கள் அகேநெடு நாளாய்
மாறாத வல்வினை வரும்பிணி யகற்றிப்
படைவந்து கிருஷ்ணனும் அனுகாம லேதான்
பஞ்சாட் சரங்கொண்டு அஞ்சத் துரத்தித்
தடையின்றி வாழவே நற்கிருபை செய்து
சந்தோஷ மாகவே அந்தமா நகரில்
அடைவுபெற வேபூசை அர்ச்சனை விரும்பி
அனைவோரு மங்கே யமர்ந்திருந் தனரே 9

## மணற்பிட்டி நகர்வு

இருந்துமத யானைகுழு மாடுகள் பிடித்து
இயல்புபெற வேயவர்கள் ஓடிவிளையாடித்

திருந்துமலர் வாவிதனில நீராடி யேதான்
திருமனதி லெண்ணி நல்ல சிவதலமீ தெனவே
பொருந்துமங் கலவீர வதனமார் தாமும்
புந்திசெறி தான்தோன்று மப்பர நகரெய்தி
மருந்துமந் திரம்முகிலி சிந்திக்க நல்ல
மணற்பிட்டி தனில்வந்து வீற்றிருந் தனரே 10

### வாழ்த்து

திருந்துமங் கலவீர வதனமார் வாழி
சிவசமய வைந்தெழுத் தோதுவோர் வாழி
பொருந்தவே பூசைசெய் கட்டாடிமார் வாழி
பூலோகம் நற்பதிகள் நீடுழி வாழி
அருந்தவஞ் செய்தசிவ முனிவோர்கள் வாழி
அருள்பெருகு மட்டுக் களப்புநகர் வாழி
பருந்துவா கனமீதி லெழுந்தருளி வருகின்ற
பச்சைமால் பொற்பாதம் வாழவாழியதே 11

""""""""""""""



# 6. வதனமார் பொங்கல் வழிபாட்டுக் காவியம்

= = = = = = = = =

மட்டக்களப்பில் இப்போதும் காட்டில் யதேச்சையாக அலேந்து திரியும் காலிகளே வெளு எனும் சுருக்குக் கயிறிட்டும் வைத்தும் பிடிக்கும் சிலர் இருக்கிருர்கள். இவர்கள் பிடித்த கால் நடைகளுக்கு குறி சுட்டு அவற்றை மந்தையிற் சேர்த்து விற்று விடுவார்கள். இவ்வித குறிசுடும் போது அதற்கான அடையாளங்கள் அவற்றின் உரிமையாளரின் குலத் துக்கும் குடிக்கும் ஏற்பப் பொறிப்பதுண்டு. அப்படியான சின்னங்களின் பட்டியல் ஒன்றை மட்டக்களப்பு மான்மியம் பின்வருமாறு தருகிறது;-

" தோணி கரையார்க்குத் தொப்பி துலுக்கருக்கு
காணியுழு மேழிசுளி காராளர்தனக்கு
நாணி வில்லம்பு நாட்டிலுள்ள வேடுவர்க்கு
எழுத்தாணி சுளி முற்குகர்க்கு கமலமலர் கோயிலார்க்கு
கைப்பிரம்பு பண்டாரப் பிள்ளேக்கு திமிலருக்குப் பால்முட்டி
'சேணியர்க்கு நூலச்சு அமலர்க்குத் தேர்க்கொடிகள்
அம்பட்டருக்குக் கத்திரிக்கோல்
விமலருக்கு மத்து வேதியர்க்குப் பூணூலாம்
வண்ணூர்க்கு கல்லு வாணிபர்க்குச் செக்கு
சுண்ணும்பு சுடும் கடையர்க்கு கூடையாம்
தொல்வேந்தர்க்குச் செங்கோல் மேளமது வள்ளுவர்க்கு
சேர்ந்த குயவருக்குக் கும்பகுடம்
தட்டார்க்கு குறடு சாணூர்க்குக் கத்தி
செட்டி குலத்தோருக்கு தோடு தராசுபடி "

இவை குலத்துக்குரிய விருதுகளாகும் இதனடிப்படையிலே மாடுகளின் குறிசுடும் அடையாளமும் இருக்கும்.

காட்டில் திரிந்து தன்னிச்சையாய் வளர்ந்தபடியால் அவை நல்ல தேகாரோக்கியமும் திடகாத்திரம் உள்ளவைகளாகவும் இருக்கும் . இதனல் இவற்றை , உழுதொழில் செய்வதற்கும் இறைச்சிக்கும் நல்ல விலேக்கு விற்றுவிடுவார்கள். குழுமாடு பிடித்தல் மிகவும் அபாயம் நிறைந்

ததொரு திரச் செயல். ஆனபடியால் அத்தகைய பட்டிக்காரர் வதனமார் வழி பாடு செய்பவர்களாக இருப்பார்கள். வதனமாருக்குரிய மந்திரங் களைச் செபித்துக்கொண்டே தொழிலில இறங்குவர். இவர்களுடன் தொடர்பு வைததிருந்த் குருமண்வெளியைச் சேர்ந்த அமரர் வே. பூபால ரெத்தினம் ஆசிரியர் என்பவர் பல வருடங்களுக்கு முன்னர் எனக்கு அளித்த ஒரு பாடற் கொப்பியிலிருந்து எடுத்த இந்தக் காவியப் பகு தியைத் இங்கு தருகிறேம். வதனமார் சடங்கின்போது கட்டாரிமார் இதனைப் பாடுவார்கள், வதனமாரின சந்நதம் வந்தவர்கள் கட்டுச் சொல்வார்கள்.

இந்தத் தனிப்பட்ட வழிபாடு பட்டி அமைந்துள்ள இடத்தில் காட்டின் மத்தியில் நடைபெறும். அத்தருணம் பட்டியின் சொந்தக்காரப் போடிமார் குடும்பமும் பட்டிக்காரர் குடும்பமும் சமூகந் தந்து வழிபடுவர்.

## காவியம்.

### காப்பு.

பார்காக்கும் பரமசிவா பயிர்காக்கும் இந்திரா
பசுகார்க்கும் பாம்பணையே பலம்கார்க்கும் வீரபத்திரா
சீர்கார்க்கும் சீதேவி செகத்தன்னை பார்வதியே
செல்வாக்குத் தரும்வாணி செல்லும் வழியில்
ஊர்கார்க்கும் வயிரவரே உலகமெனப் பெற்றவரை
உடன்சுற்றிப் பழம்பெற்ற உத்தமப் பிள்ளையாரே
ஏர்காக்க எமைக்காக்க எல்லாவுயிரும் கார்க்க
ஏறுமயில் வாகனரே எமக்குகந்த காப்பாமே 1

சுவாதியம்மை திருமகளும் சுடர்சோதி நயினர்
சுந்தரத்து மங்கலனர் சூழவரும் வதனர்
தவநூற்று அறுபதினரும் தங்கியிங்கு நின்று
தாக்குகின்ற தியசக்தி தம்மையே நீக்கி
அவமாக்கும் புலிகரடி அரியநாய் நரிகள்
அரவங்கள் தேள்பூச்சி அழிவுதரும் பிணியைத்
துவம்சமது செய்தழித்துத் தொல்லைகளை ஒழித்து
துட்டரிலிருந்து காத்தெமக்குத் துணைதரவே வாரீர் 2

மக்களில்லாக் காட்டினிலே மான்மரைகள் காலி
மதயானை ஒநாய்கள் மறைந்துறையும் பாம்பு
திக்கெட்டும் பரக்கின்ற திகைப்புள்ள இடத்தில்
திரிந்தலைந்து வாழுகின்ற உம்மடியார் தமக்கு



எக்கேடும் வாராது இருளன்மருளன் என்னும்
எமதூதர் காவலிட எழுந்தருளி வந்து
பக்குவமாய் உந்தனருள் பரிந்ததிடவே வேண்டி
பணிந்திட்டோம் இத்தருணம் பாலித்திடும் தேவே 3

காரிருளில் பெருமழையில் காவலதைக் கடந்து
களவாகக் கால்நடைகள் கவர்ந்துசெல்லும் கள்ளர்
வேரிலாத மரமாக விரைவினிலே வீழ
வேல் தண்டு கோடாலி வெளுக்கயிறு மந்து
கூரியவாள் கொடியமழு கொண்டெம்மைக் கார்க்க
கூடிநின்று தாள்பணிந்து கும்பிடுகிறேம் ஐயா
ஆரியனே ஆயனர் அருங்குலத்து வந்த
அழகுசெறி வதனமார் அண்ணலே வருக 4

மனிதக்குரல் ஒலிக்காத மாபெரிய வனத்தில்
மாதவனர் குலத்தொழிலில் மாடுகளைக் கார்த்து
கனிகிழங்கு பால்தயிரால் காலமெல்லாம் வாழ்ந்து
காட்டில்வாழ் மிருகங்களாய் காய்ந்துடலம் மெலிந்து
தனிமையிலே கிடந்துநாம் தவிக்கின்ற நிலையைத்
தான்பார்த்து எங்கள்மேல் தயவுவை ஐயா
புனிதனே இருளில் புழுபூச்சி நகர்ந்து
புகுந்தெம்மைத் தாக்கிப் புடைக்காமல் காரே 5

காரம்பசு என்றும் காமதேனு என்றும்
காலமெல்லாம் போற்றுகின்ற காலிகளைப் பிடிக்கும
காரணத்தால் வெளுவைக்க கால்கடுக்க ஓடி
காட்டினிலே செலும்போது காவலாக வருவாய்
சாராயம் கள்ளுகஞ்சா சாம்பல்செறி மொந்தன்
சர்க்கரையும் பாலுமிட்ட சம்பாவின் பொங்கல்
பாராயணம் செய்துமக்கு படையலது இட்டோம்
பக்தரெமைக் காத்தருளும் பக்கத்துணை நீரே 6

மாரிவந்தால் குளிராலே நடுங்குகின்ற போது
மாடுறையும் பட்டியிலே மறைந்து வந்து தாக்கும்
பேரிருளன் மருளனெனும் பெய்களையே துரத்தி
பிள்ளைகளாம் எங்களையே பேணிநீ காப்பாய்
சேரியில்லாக் காட்டினிலே செறிபரணில் தனித்து
சீவிக்கும் எங்கள்மேல் சீறுகின்ற வெள்ளைக்
கூரியதாம் கொம்புடைய கொடிய கிடா வகையின்
கொலைக்கண்கள் பாயாது கோபாலா காரே 7

கொடுவெப்பங் கூடியதால் குளத்துநீர் வற்றி
கொள்ளைநோய் மந்தைக்கு கொடுமைசெயும் நேரம்
படுதுயரம் சொல்லொண்ணாப் பரிதாபந் தீரும்
பசுநிரைக்கு அம்மைநோய் பாதிப்பு நீக்கும்
தடுத்தாளும் மங்கலனார் தாயேசுவாதி யம்மா
தனையர்களே வதனமார் தங்குமெங்கள் பட்டி
விடுத்தெங்கும் செல்லாது விளையாடி நின்று
வினைதீரும் எங்களின் விண்ணப்பம் கேளே 8

அரிஅரிஓம் நாராயணா ஆதிசேடன் அணையில்
அனந்த சயனமிடும் ஆதிமூல நாதா
சுரிசேறு ஆறுகுளம் சூழ்ந்துவாழ் முதலை
சுழற்றுவால் கொடும்பற்கள் சொண்டாலே நிரையை
பிரித்தெடுத்து தாக்கினாலே பிழைத்திடவே கார்ப்பாய்
பிரானேநீ கசேந்திரனார் பெரும்புலம்பல் கேட்டு
பிரியமுடன் புவிவந்து பேணியே காத்த
பெரும் பேறு எங்களுக்கும் பிரியமுட னருளே 9

திருமருவு மாலினது தேங்குகுல மாகத்
தேர்ந்தெடுத்த வதனமார் திசைதோறும் காக்க
கருநிறத்துக் காலனவன் கதிபெற்ற எருமை
காத்தளிக்கும் எங்குலத்தைக் காலமெல்லாம் காக்க
பெருவுடலன் வரித்தோலன் பித்தவிசம் கக்கும்
பிரிநாக்கன் பின்கொடுக்கன் பீடியாது காக்க
வருகொள்ளை கள்ளர்கள் வரட்சியுறு கோடை
வார்வெள்ளக் கொடுமைகள் வருத்தாது காக்க 10

புல்நிறைந்த காட்டினிலே பூக்கட்டிப் பந்தல்
புனைந்ததிலே பத்திரமும் பாளைதேன் சூடி
நெல்கதிரும் குருத்தோலை நீள்மாவின் இலையும்
நீள்குரும்பை தாமரைப்பூ நிரைநிரையாய்த் தூக்கி
மல்லுடுத்துத் தலைப்பாகை மதிப்புடனே கட்டி
மஞ்சள்நீர் கெண்டிகளும் கற்பூரத் தட்டு
வல்லமைசேர் மழுவுடனே வளைந்தவெளுக் கயிறு
வடிவான தீபகலம் வண்ணமதைத் தந்தோம் 10

சார்ந்துவந்து பூசைசெய் சங்கைகட் டாடி
சாற்றுகவிக் காவியத்தை சத்தமிடு உடுக்கு
வார்ந்தெடுத்த மத்தளமும் வளைசிலம்பும் ஒலிக்க
வதனமார் சந்நதத்தில் வந்துகுதி போர்கள்
கார்ந்துமவர் கட்டாலே கனதுயரைத் தீரும்
கதிக்கவே பட்டிநிரை காலமெல்லாம் நிறையச்



சேர்ந்திடவே சுவாதியம்மை திருமகனும் வதனர்
சிறப்பதனால் தேசமெங்கும் சீர்பெறவே செய்க 11

கன்னிமார் எழுவருமே கால்நடையைப் பெருக்கக்
கதிபெற்ற மங்கலனார் கடைக்கண்ணால் பார்க்க
பின்னிவரும் வதனமார் பேணியெமைக் காக்க
பெற்றதாய் சுவாதியம்மை பின்தொடர்ந்து காட்டில்
முன்வருகும் இடர்களைந்து முழுநலமும சேர்க்க
முழுப்பொங்கல் தான்படைத்தோம் முனைந்துவந்து ஏற்று
பன்னலமும் பால்தயிரும் பசுநிரையும ஓங்க
பாலித்திடவே உங்களது பாதங்களைத் தொழுதோம் 12

அம்மாவெனப் பசுகதறும் அலறல் காதை
அடையாத காரணம்தான் அறியோம் அய்யா
விம்முகின்ற பட்டிகளைக் கார்க்கும் எங்கள்
விண்ணப்பம் கேட்டருள வேண்டு மய்யா
தம்பிமாராம் வதனமார் தன்னுடனே வந்து
தற்காக்க மங்கலனார் தயவே வேண்டும்
எம்முடனே இரவுபகல் என்றில்லாமல்
எதிர்காக்கும் குக்கல்மேல் இரங்கும் தேவே 13

தேன்வெட்டும் போதேதும் தீமை வந்து
தெருட்டாமல் இருக்கவுன் திருவருளைத் தாராய்
வான்பொய்த்தால் வரட்சியிலே வளரும் புல்கள்
வராமல் பசுமையுறப் பனியைத் தாரும்
கோன்வதனர் நரசிங்கர் கூடி வந்து
கோள்திசைகள் நாலுமே சுற்றி நின்று
ஆன்நிரைகள் காத்திடும்நல் ஆட்சி வேண்டும்
அய்யனே மங்கலனார் ஆயர் கோவே 14

வதனமார் நலம்வாழி வயிரவரும் வாழி
வளராயர் குலம்வாழி வருசோதி யம்மை
இதமான மங்கலனார் இனிது வாழி
இலங்கை வந்திடர் தீர்த்துபட்டி தன்னை
நிதங்காக்கும் திருமகளும் நீல வண்ணன்
நேசமுறு மந்தைகளும் நீடு வாழி
பதம்தொழுகும் அடியார்கள் பணிந்துபூசை
பாலிக்கும் கட்டாடிப் பார்ப்பார் வாழ்க 15

===============

# 7. பட்டிக்காரர்களின் வதனமார் பற்றிய நம்பிக்கை.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து, மட்டக்களப்பில் நிலை கொண்டு வாழ்ந்த வதனமார்களின் தற்போதைய நிலை என்ன? அவர்களோ அல்லது அவர்களின சந்ததியினரோ இப்போதும் வாழ்கிறார்களா? எங்கே வாழ்கிறார்கள்? என்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றிற்கு விடைகாணமுடியாத ஒருநிலைதான் உண்டு என்பதே இதற்கு விடையாக அமைகிறது.

மட்டக்களப்பு வாவியை அடுத்து படுவான்கரைப் பிரதேசம் வேளாண்மைச் செய்கைக் குடியிருப்புகளைக் கொண்ட நிலமாக அமைகிறது. அதனால் அங்கு கிராமங்களும் அவற்றைச் சூழ்ந்த வயல்களும் இணைந்தே இருக்கின்றன. இந்த அமைப்பு இன்றும் மாறாதிருந்து வருவதைக் காணக் கூடியதாயிருக்கிறது. இந்த குடியிருப்பை அடுத்து மேற்குத் திசையில் பரந்தபுல்வெளியும் காடும் இருக்கிறது. பொதுவாகச் சொல்லப் புகுந்தால் கிழக்கில் நெய்தல் நிலம், அதையடுத்து வரும் மருதத்தைத் தொடர்ந்து முல்லை நிலம், பின்பு குறிஞ்சி எனும் முறையில் நிலத்தோற்றம் அமைகிறது. வங்கக் கடற்கரையில் இருந்து மட்டக்களப்பு வாவியை ஊடறுத்துச் சென்றால் இந்த நான்கு திணை நிலங்களையும் ஒன்றின்பின் ஒன்றாக 15 மைல் இடைவெளிக்குள் தரிசிக்கலாம். கடற்கரையோரத்து கிராமங்களின் மேற்குப் பக்கத்தில் உள்ள எழுவான் கரையில் நின்று பார்ப்பின் வளைத்துச் செல்லும் மலைத்தொடர் ஒன்று அண்மையில் உள்ளதுபோன்ற காட்சியைப் பார்க்கலாம்.

வதனமாரின் பயணம் இந்த புல்வெளி அடர்ந்த காடுகளை அண்டியே நடைபெற்றது. இவர்கள் திருகோணமலைக்கு வந்து, இதே புவியியல் அமைப்புள்ள கந்தளாய் தம்பலகாமம் வாகரை முதலிய இடங்களின் வழியாக மண்முனை, கரவாகுப் பற்றுக்களைக் கடந்து பானமைமட்டும் சென்றனர். பின்பு திரும்பி திருக்கோவில், தம்பிலுவில், வீரமுனை, காரைதீவு முதலிய இடங்களைக் கடந்து மண்டூருக்கு அருகாமையில் உள்ள நாதனைவெளி எனுமிடத்தில் தங்கி வாழ்ந்தனர்.



இவர்களின் இந்த நெடும் பயணத்தில் எங்கெங்கு குழு மாடுகள் வாழ்கின்றன, அவைகளை மந்தைகளாக வளர்க்கத் தக்க நீர், புல், ஆதிய வசதிகள் வசதிகள் உண்டா என ஆராய்ந்து வந்தனர். இப்படிப்பட்ட இடங்கள் தென்படும்போது தம்முடன் வந்தவர்களை ஆங்காங்கு குடியமர்த்தியும் சென்றனர். இவ்வாறுதான் வதனமாரின் இடைவிட்ட குடியேற்றம் அமைந்தது.

நாளடைவில் இவர்களின் மந்தை வளர்ப்பு நலிவடைந்ததால் இவர்கள் என்னவானார்கள் என்பதை இனங் காணமுடியாதளவு மறையலாயினர். எனினும் இலங்கையின் குடிவரவு அகல்வுச் சட்டம் நடைமுறைப்படுத்தியதும் மட்டக்களப்பில் மந்தை வளர்த்து வந்த ஒரு இனத்தாரைக் காண்பதரிதாயிற்று. இவர்கள் நாடோடிகளாக வாழ்ந்து வந்த பசினர் அல்லது பயினர் எனப்பட்டனர். இவர்கள் தமிழ் கலந்த தெலுங்கு மொழியைப் பேசி வந்தனர். காலத்துக்குக் காலம் தங்கள் மந்தைகளுடன் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை நோக்கி மட்டக்களப்பின் தெற்கிலிருந்து வருவார்கள், இவர்களுடன் மந்தைத் திரட்சியும் மனைவி மக்களும் கூட்டமாக வரும் வழியில் கிராமத்தை அண்டிய பகுதியில் உள்ள பாழ்வளவுகளில் தங்கி செல்வர். இவர்களின் நாடோடி வாழக்கை முறையும் கள்ளுண்டு ஆடும் ஆட்டமும் காண்போர்க்கு நகைப்பும் களிப்பும் ஊட்டும்.

இவர்களின் நடமாட்டம் உள்ள பகுதி மக்கள் தமது சொந்தக் கால்நடைகளில் கண்ணுங் கருத்துமாக இருப்பதுண்டு. ஏனெனில் இவர்கள் கட்டுப்பாடற்று ஊர் சுற்றும் கட்டாக்காலிகளைக் கடத்தித் தமது மந்தைகளுடன் மந்தையாகக் கொண்டு சென்று விடுவர். இப்படி கொண்டுவரும் மாடுகளை மட்டக்களப்பில் இருந்து,கொழும்புக்கு இரயில் வண்டிகள மூலம் கொண்டு சென்று அங்கு இறைச்சிக்காக விற்பது வழக்கம்.

இவர்கள் இந்தியாவிலிருந்து நாயக்கர் ஆட்சிக் காலத்தில் வந்து காடும் புல்வெளியும் கலந்த இடங்களில் பட்டி அமைத்து வாழ்ந்திருக்க வேண்டுமென்று துணியலாம். இவர்கள் இலங்கைப் பிரசைகளாக இல்லாதபடியால் இலங்கைச் சமூகத்திலிருந்து மறைந்தனர். இலங்கைக் குறவர்களை ஒத்த இவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றனரா அல்லது காட்டருகே வாழ்ந்த மக்களுடன் மக்களாகக் கலந்தனரா என்பது ஆய்ந்தறிய வேண்டிய காரியமாகும். ஆனால் இவர்கள் வதனமாரின் சந்ததியினர் இல்லை என்பது மட்டும் உறுதியாகும்.

வேளாண்மைச் செய்கைக்கு வலது கரமாக மாடுகள் அமைந்திருந்ததால் அவற்றை போடிமார்கள் வளர்த்துக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டது. காடுகளில் மாடுகளைக் காப்பாற்றும்

வல்லமை எவருக்கும் கைவராததொன்று. ஆனபடியால் தமது வயல் களில் பணிபுரிந்த சிலரிடம் தமது மாடுகளை ஒப்படைத்து வளர்த்து வரச் செய்து அவர்களுடைய நாளாந்தரத் தேவைக்கு வேண்டிய நெல்லைப் படி அளந்து கொடுத்து வந்தனர். அத்துடன் பட்டிகளில் இருந்து வரும் பால் தயிர், நெய் என்பனவும் அவர்களுக்குச் சேர்ந்தது. இடைக்கிடை போடி மாரின் தேவைகளுக்கும் இவற்றை அளித்து வந்தனர்.

சிறுதொகை கொண்ட மந்தைகளை பாதுகாக்கும் இடம் பட்டி என்றும் பாதுகாப்பவர்களை பட்டிக்காரர் என்றும் அழைத் தனர். சன நட மாட்டமற்ற காடுசார்ந்த இடங்களிலே பட்டிகள் அமைந் திருந்தபடியால் பட்டிக்காரர் மக்களிடையே இருந்து பிரிந்து பட்டி களின் மத்தியில் அமைந்த பரண் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். இதனால் படிப்பறிவோ நாகரீகத்தின் நிழலோ இவர்களைத் தீண்டுவது அருமையாக இருந்தது.

ஒரு காலத்தில் பட்டிக்காரர்பற்றிய எண்ணம் மக்களிடையே மட்டமாக இருந்து வந்தது.. காடுகளில் எருமை மாடுகளுடன் வாழ்ந்து வந்ததால் இவர்களின் வாழ்க்கை அசாதாரணமாகவே அமையும் சூழ் நிலை தடுக்க முடியாத ஒன்றாக இருந்தது. எனினும் பல பயங்களுக்கு இடையில் வாழ்ந்த இவர்களை நாட்டார் மறந்தாலும் பசுவின் பாலும், தயிரும், நெய்யும். காட்டுத் தேனும் அவர்களை நினைவூட்டின. இவர்களு டைய குடும்ப சீவியம் விக்கிரமாதித்தனின் வாழ்வுக் காலம்போலவே இருந்தது. அந்த வாழ்க்கையாவது ஆறுமாறு மாதங்கள் தொடர்ந்தன. ஆனால் பட்டிக்காரரின் வாழ்க்கையோ மாதத்தில் ஒரு சில தினங்களில் மட்டும் நாட்டிலும் ஏனைய காலமெல்லாம் காட்டிலும் கழிப்பதாகவே அமைந்தது.

புதிய பட்டிக்காரர்கள் தோன்றினாலும் அவர்களின் காடுசார்ந்த தனிமை வாழ்க்கை வதனமார்பற்றிய நம்பிக்கைகளில் நிலைத்து வந்தது. வருடந்தோறும் வதனமார் பூசைசெய்வதுடன் வதனமார் காவியங்களை மனனஞ் செய்து வைத்து இரவில் பாடித் தமது மனப்பயங்களை அகற் றியும் வந்தனர்.

இதுமட்டுமல்ல இரவில் பட்டியின் படலை அடைக்கும்போதும் தேன் எடுக்கச் செல்லும்போதும், காடுகளில் புகுந்து குழு மாடுகளைப் பிடித்து அடக்கும்போதும் மனனஞ் செய்து வைத்திருக்கும் மந்திரப் பாடல் வரிகளைத்: தமக்குள்ளே உச்சரிப்பதுண்டு. அப்படிப்பட்ட சில மந்தி ரங்களைக் கீழே தருகிறோம்.



# 1. படலை அடைக்கும் மந்திரம்

காட்டுவெளியில் மத்தியில் பட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். உறுதியான திருக்கொன்றை, முதிரை, கருங்காலி, பாலை முதலிய மரங் களைக் கதியால்களாக வெட்டி வந்து நட்டு, எதுவும் நுழையாது வட்ட மாக வேலியடைத்து அதனுள் மந்தைகளை வைத்துக் காப்பர். காலை பால் கறந்த பின்னர் மேய வெளியே விடுவார்கள் மாலையானதும் அவற்றைத் திரட்டி வந்து பட்டிக்குள் ஏற்றி அடைப்பர். அப்போது உள்ளுக்குள் இருக்கும் மாடுகள் வெளியே வராது இருக்கவும் உள்ளுக்குள் புலியாதிய கொடிய மிருகங்கள் உட்புகாதிருக்கவும் வதனமாரை நோக்கி மந்திரம் செபித்துப் படலையை அடைப்பர். அப்போது மூன்று தடவை நிலத்தில் காலால் கோடிட்டு மறித்து ஆணை செய்வர். பட்டியின் மத்தியில் தினு எனும் நெருப்பிட்டுக் காலைவரை எரிப்பர்.

வதனா வாவா வந்திங்கு இருந்து
வருகின்ற நரிபுலி படலையைத் தாண்டி
அருகினில் வராது ஆண்டிடு நயினா
காக்காய் வதனா காவலுக்கிருப்பாய்
கடப்படி வதனா காலியைக் காப்பாய்
வடக்கிலும் தெற்கிலும் வளையவா வா
கிழக்கிலும் மேற்கிலும் கிட்டியாய் இறுக்கு
இறுக்கு இறுக்கு இரும்பாக இறுக்கு
உறுக்கு உறுக்கு ஓம்என உறுக்கு
மங்கல ஞரே மாதா சுவாதியே
மறந்திடாது பொங்கல் மடைகளைப் படைப்போம்
எங்களைக் காப்பாய் எருமையைப் பசுவை
கன்றைக் கறவையைக் கடுகியே காப்பாய்
பட்டியைக் காப்பாய் பால்பொங்கல் தருவோம்
ஓம் சுவாகா சுவாகா சுவாகா ஓம்'

என்பது படலைக்காப்பு மந்திரம். இது பட்டிக்குப் பட்டி வேறுபடும். வேறு ஒரு மந்திரம் இங்கே தரப்படுகிறது.

"அரிஅரி நாராயணா அரிஓம் நாராயணா
நரிபுலி கரடி நாகம் கொடுநாய்
வழியை அடைத்து வராமல் காப்பாய்

தரித்திங்கு திருடர் தயையிலா மறவர்
வரிச்சனை அறுத்து வந்துட் புகுந்து
காலியை விரட்டிக் கடுகியே ஏகாது
வேலியாய் நின்று வீரரே காரும்
அரிஓம் அரிஓம் ஆதிநாராயணு
அரியின் குலத்து அருள்மிகு வதனு
காக்கக் காக்கக் கதிபடக் காக்க
நோக்க நோக்க நொடிபட நோக்க
ஓம்அரி ஓம்அரி ஓம் ஓம் சுவாகா

## 3. இருளன் மருளன் பிரார்த்தனை

அரிதிரு முருகா குருவே போற்றி
சிவனிட குருவே செவ்வேல் போற்றி
என்னுட சிவனைத் தேடியெக் காலமோ
எக்கோடி காலமோ தேடினே னையா
ஆதி மருளா ஆங்கார மருளா
ஓம்நமோ மருளா ஓங்கார மருளா
உடலிங்க மருளா சிவலிங்க மருளா
மத்தப் பிறமத்தா சித்தப்பிற சித்தா
சுத்தப்பிற சுத்தா அத்தப்பிற அத்தா
அக்கினிமா மலையில் நின்று
அயோத்திமா நகர்போய் அங்கு
மெய்க்கவே யாடி வந்து
வேண்டும் வரங்கொடுக்கும்
பாதாள பரமேசுரி பிள்ளையோ சிறிமருளா
இராச மருள்வீரா என்தேவதேவனே

## 4. ஆதிசேடன் கட்டு

விரிந்த நாக்கு விசங்கொள் பல்லு
சுருண்ட உடலாய் சுண்டி இழுத்து
எலும்பெலாம் விரிய எழுந்திட முடியா
அரவே உன்னை ஆணையிட்டுரைத்தேன்
வந்தவழியே புற்றுக்குப் போ
வராதே இந்தவழியால் மறந்திடு ஆணை
கோபாலன் பசுக்கள் கோபட்டி காக்கும்



ஆதிசேடன் மேல் ஆணை ஆணை ஆணை
அதற்குமேல் நகர்ந்தால் அழிந்தே போவாய்
ஆடியில் பொங்கல் அடைவாய்ப் படைத்து
பால்முட்டை தருவோம் பாய்ந்தப்பால் ஓடு
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம் சுவாகா

## 5. வயிரவர் தோத்திரம்

கால வயிரவா கண்டவயிரவா
ஆலத்தை உணடவன் அருமைப் புதல்வா
சூலம் பொல்லு சுழற்றும் கோடாலி
சொருகி நாய்மேல் சுற்றியே காவல்
செய்ய வருவாய் செந்நாய் கரடி
சீறும் நாகம் செப்படிக் கள்ளர்
நாறும் பேய்கணம் நலிக்கும் பூதம்
கோரப் பல்லுக் கொடிய நாகம்
சேரவிடாது செவ்வேள் காக்க
பட்டியைக் காக்கப் பசுக்களைக் காக்க
பட்டியைக் காக்கும் பாலன் என்னை
இட்டமாய்க் காக்க இடர்களைக் காக்க
இரவு பகலாய் என்னுடன் இருந்து
காத்து ஆள்வாய் கதிநீ தருவாய்

இவைகள் எல்லாம் தனித்து வாழும் பட்டிக்காரர்களின் தத்தளித்துத் தவிக்கும் மனதில் தளாரத நம்பிக்கை ஊட்டும் தாரக மந்திரங்கள்,. இவற்றை அவர்கள் இடைக்கிடை ஓதிக்கொள்வதால் ஒரு தற்காலிக உள உறுதி ஏற்படும். இந்த நம்பிக்கையுடன் வதனமார் தங்களைக் கார்க்கிறார்கள் என்ற விசுவாசமும சேர்ந்து தங்கள் பட்டி வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.

## முடிவுரை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிப்பளை, பட்டிருப்பு எனும் இடப்பெயர்கள் இங்கெலாம் பட்டிகள் அமைந்திருந்ததை உறுதிப்படுத்து கிறது. பதியத் தலாவைகூட பட்டித் தளாவை என்ற பெயரின் திரிபோ என நம்ப இடமுண்டு. பட்டிக்காரர்களுக்கு காட்டில் வாழும் குழு மாடு களாலும் அபாயம் ஏற்படுவதுண்டு. மாடுகள் சினைப்படுங் காலத்தில மறிமாடுகள் பட்டியிற் புகுந்து விடுவதுண்டு. அவ்வேளையில் மாடுகளைத்

தமது கூரிய கொம்பால குத்திக் கிழிப்பதும காலத்துக்குக் காலம் நடைபெறும். இத்தகைய காலத்தில் தமக்கு நேரவிருக்கும் பேரபாயத்தையும் பொருட்படுத்தாது தனியொரு ஆளாக நெருப்பு பந்தங்கங் கொண்டு விரசியடிப்பதுண்டு. இதுபோலவே பட்டி மாடுகள் பக்கத்துக் காட்டில உள்ள நாகுகளை நாடிச் செல்வதும் உண்டு. அப்படிச் செல்லும் மாடுகள் மீண்டும் குழு மாடுகளாகிவிடும்.

இதுபோல திடீரென்று பெருகி வரும் காட்டாற்று வெள்ளத்தாலும், பககத்தில் உள்ள குளங்கள் மழைக் காலத்தில பெருக்கெடுப்பதாலும், பாய்ந்து வரும் வெள்ளம் பட்டிகளை வாரிஎடுத்துச் செல்வதும் உண்டு.

நானறிந்த அளவில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை இங்கு சொல்வது இதை விளக்குமென்று நம்புகிறேன். ஒரு ஆசிரியருக்கு புல்லுமலைப் பக்கத்தில் ஒரு பட்டி இருந்தது. அங்கு பல வசதிகளைச் செய்து கொடுத்து பட்டியைக் காத்து வந்தார். அங்கு உள்ள வாடியில் பட்டிக்காரனும் ஆறுபேர் கொண்ட அவனது குடும்பமும் வாழ்ந்து வந்தனர். இதனால் அந்த ஆசிரியரைப் பட்டிக்கார மாஸ்டர் என்று சொல்வார்கள். அவர் இடைக்கிடை விடுதலை நாட்களில் அங்கு சென்று வருவதுண்டு.

இப்படி இருக்கும்போது *1957*ம் ஆண்டில் நடைபெற்ற பெரு வெள்ளக் காலத்தில் அங்கு சென்றவர் அகப்பட்டுக்கொண்டார். பெருகி வந்த வெள்ளத்தைக கண்டு தன் குடிசையின் கூரையில் ஏறி நின்றார். அங்கும் நீர்பெருகி வரப் பக்கத்தில் நின்ற தென்னை மரத்தில் தாவி அதன் வட்டுக்குள் ஒதுங்கிக் கொண்டார். வெள்ளம் இரு நாட்களுக்கு விடியவே இல்லை . இரண்டு நாட்களும் தென்னை மரத்தில் நடுங்கும் குளிரிலும் மழையிலும் துன்பப்பட்டு வெள்ளம் வடிந்ததும் பார்த்தால் பட்டியையோ அதில் இருந்த கால்நடைகளையோ காணவில்லை. அதுமட்டுமல்ல பட்டிக்காரனும் குடும்பத்தோடு வெள்ளத்தில் அடிபட்டுப் போனதை அறிந்தார். உயிர் தப்பிய அவர் மிகவுஞ் சிரமம்பட்டு தனது வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இப்பிடியான வெள்ளக் கொடுமைகளும் இடைக்கிடை இடம்பெறுவதுண்டு.

களுவாஞ்சிக்குடி கவி கனகசபை என்பவர் சிறந்த கவிஞர், நாடக நடிகர், நாடக ஆசிரியர், இயக்குநர். பல தோத்திரப் பாக்களை நூல் வெளியிட்டவர். இலங்கை வானொலியில் நிகழ்ச்சிகளை நடத்துபவர்களுக்கு பின்னணிக் குரல் வழங்குநராக உதவி புரிந்தவர். அவர் பாண்டிருப்பு திரோபதை அம்மானை எனும் நூலை அச்சிட எனது அச்சகத்திற்கு வநதார் . அதற்குரிய கையெழுத்துப் பிரதி எழுதப்பட்டிருந்த கொப்பிப் புத்தகத்தின் பின்பக்கங்களில் 'கோவலன் - கண்ணகி' என்ற ஒரு நாடகமும் இருந்தது. அதில் ஒரு போடியாருக்கும் பட்டிக்காரனுக்கும்



இடையில் ஏற்பட்ட மனக் கசப்பு நகைச்சுவைக்காக எழுதப்பட்டிருந்தது. அதுவும் மதுரைப் பண்ணைக்காரனுக்கும் இடையனுக்கும் இடையில நடப்பதை நம் நாட்டிற்கேற்ப அவர் இப்படி மாற்றி அமைத்திருந்தார். இந்த நூலை முடிப்பதற்கு முன்னர் அதை இங்கு எடுத்துச் சொல்வது நலமென எண்ணுகிறேன்

போடியார் வீடு. கந்தப்போடியார் அடுத்த தினம் வீட்டில் நடக்கவிருக்கும் கலியாணத்திற்கு வேண்டிய தமிர் பால் நெய் என்பவறறை தனது பட்டியிலிருந்து பட்டிக்காரன் கொண்டு வருவான் என எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நேரம் போகிறது. இதனால் எரிச்சலடைந்த போடியார் படிக்கிறார்.

**பிடித்துப் பாருங்க சொக்கலால் பீடியை ஒரு தடவை**
**என்ற மெட்டு**

**மிஞ்சிப் போனானே சின்னத்தம்பி மிஞ்சிப் போனானே**
**கஞ்சிக்கும் வழியில்லாமல் காஞ்சு கிடந்தவனை**
**கஞ்சிகுடித்தாற்றுப் பட்டிக்கு காவலாப் போட்டபின்பு - மிஞ்**

**ஆறுமாதம் ஆகிப்போச்சு ஆளையே நான் காணவில்லை**
**ஆள்நடமாட்டம் வீட்டில் அதிகமாய இருக்குதெண்டு**
**ஆரோ சொன்னதெல்லாம் அநியாயம் என்று எண்ணி - மிஞ்**

**முறையாகப் படியைமட்டும் முன்னாலே வந்து வாங்கி**
**நிறைவாக இருக்குக் குடும்பம் முட்டாளாய் ஆக்கிப் போட்டு**
**பறைப்பயல் இந்தப் பக்கம் பாராமலே இருக்கிறானே -மிஞ்**

**பட்டியிலே எத்தனை மாடு பார்க்கலா மென்று அங்குபோனால்**
**கிட்டவிட மாட்டான் எண்ணக் கிடக்கும் அவற்றின் வாலை எண்ணி**
**மட்டிமடையன் கணக்காய்ச் சொல்லி மடுத்துவிட்டுப் போகிறானே - மிஞ்**

**எத்தனை மாடு கன்றை எவனெவனுக்கு விற்றுவிட்டு**
**வித்தைகள் காட்டுறானே விளையாட்டு ஆடுறானே**
சத்துராதி நம்பினவர்க்கு சதிசெய்து போடுறானே - மிஞ்

பட்டிக்குச் சொந்தக்காரன் பாலதயிர் காசுக்கு வாங்கும்
முட்டாள் தனத்தை எனக்கு முடிசூட்டிப் போட்டு விட்டான்
பட்டிக்காரன் அவனா நானா பாக்கப்போறேன் ஒருகை இன்று - மிஞ்

ஈன்றதெல்லாம் கிடாவாப் போச்சாம் இருக்கிறதும் மலடாப் போச்சாம்
எப்படிப் பால்தயிரு வரும் என்றென்னைக் கேட்கிறானே
பன்றி மகன் பட்டியிலே பகற்கொள்ளை அடிக்கிறானே - மிஞ்சி

அப்போது அங்கே சின்னத்தம்பி சில தயிர்ப்பானைகளைக் காவிக கொண்டு வந்து குசினிப் பக்கம் பொய்விட்ட கால்முகம் கழுவி விட்டு போடியாரிடம் வந்து

**மார்கழி மாதம் திருவாதிரை நாள் என்ற மெட்டில் பாடுகிறுன்**
**அதற்குமுதல் தொகையரு ஒனறை மனதுக்குள் பாடுறுன்;**

காக்கொத்து நெல்லைக் கொடுத்து கால்படி அரிசியும் தவிடு
காக்கொத்தும் கொண்டுவா என்ற கடப்பளிப் போடியாரே
சோக்காக வீட்டில் இருந்து சோற்றுடன் தயிரும் உண்பாய் நாளே
வேக்காட்டில் வெந்து நொந்து வெட்டையில் பசியால் வாடி

பாட்டு

வந்திட்டேன் போடியாரே வரப்போகும் கலியாணத்திற்கு
தந்திட்டேன் தயிரு நெய்பால் தயவாக ஏற்றுக் கொள்ளும்
முந்தநாள் தொட்டு மூன்றுநாலு பேரிடம் சொல்லி
வந்திட்டேன் கெஞ்சிப பெற்று வாங்கிக்கொள்ளும் - ஆண்டே

இரண்டொரு நாகு ஈன்றுது கன்று அதுவும்
இரவோடிரவாக இருப்பதைக் குடிசசால் பாலு
எப்படி வருமோ போடியாரே இதெல்லாம் எந்தன் விதி
தப்பொன்றும் நினையாதிங்க தயவு புரியுங்க எனககு

**மீண்டும் ஒரு தொகையருவை தனக்குள் சொல்கிறுன்**

எல்லாரும் பட்டுடுக்க ஏன்போடி என்ற குடும்பம் மட்டும்
இல்ல ஒரு பருத்திதானும் இல்லாமல் என்ற பிள்ளைகுட்டி
தொல்லப்படம்னு என்று தொப்பி வைத்த அலியாரிடம்
நல்லாக ஐந்து கிடாவை நான் கொடுத்து வருசம் வைப்பேன்

இப்படியாக இருவருக்கும் இடையில் உள்ள மனக்கசப்பு நாடகம் தொடர்கிறது. ஒருவேளை இப்படியான மனக்கசப்புத்தாளே இன்று பட்டிக்காரரைப் பண்ணைக்காரராக்கியதோ?

வதனமார் வழிபாடு ஓர்மதிப்பீடு

முற்றும்



# சொல் விளக்கம்

(இந்த நூலில இடைக்கிடை பாவிக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு மண்வளச் சொற்களின் விளக்கம்)

**இளந்தாரி** - வாலிபன்
**ஓர்மித்தல்** - துணிதல்
**கட்டாடிமார்** - பூசாரிகள்
**கடப்படி** - வாசல்
**கதியால்** - வேலிக்கு நடும் மரம் அலலது கம்பு
**காத்தாடி** - காவுதடி இருபக்கமும் தொங்கும் கயிற்று உறியில் பொருளை வைத்து தோழில் வைத்துப் பாரஞ்சுமக்கும் நீண்ட தடி
**காலி** - மந்தை
**இட்டி** - மரங்களைக் கொண்டு அமைக்கப்படும் வேலி உறுதியாக இருக்க இரு பக்கமும் நீண்ட தடிகளை வைத்துக் கொடிகளால் இறுக்கிக் கட்டுதல்
**குரும்பை** - இளநீர்
**குழு மாடு** - எதேச்சையாக காடுகளில் அலைந்து திரியும கால் நடை
**சகலாத்து** - ஆடை அணிகள் யாவும்
**சடங்கு** - சக்தி வழிபாட்டிலும் காவற் தெய்வங்களுக்கும் நடாத்தப்படும் வழிபாட்டுப் பூசை
சாடியடித்து ஓடல - தலைதெறிக்க ஓடுதல்
**தினை** (தீ நா) - காட்டு விலங்குகளை விரட்டுவதற்கு பட்டியில் எரிக்கப்படும் பெரு நெருப்பு
பட்டி - காட்டு மத்தியில் கால்நடைகளை வளர்த்துப் பேணும் இடம்
பட்டிக்காரன் - கால்நடைகளை பட்டியில் வைத்துப் பேணுபவன்
படலை - சூழ வேலியமைத்த இடத்தின் வாசலில் இடப்படும் கம்புகளால் கட்டப்படும் கதவு.

படலைக் காப்பு மந்திரம் - வாசல் வழியாக எதுவும் நுழையாது செபித்து ஆணையிடும் மந்திரம்

பயினர் , பசினர் - கால்நடைகளை வளர்க்கும் ஒரு இனத்தார்

பரண் - வயலிலும் பட்டியிலும் காவற் பணி புரிபவர்கள் தங்குவதற்கு கட்டப்படும் மாடி வைத்துபோன்ற உயர்ந்த குடில்கள்

பெருவுடலன் - யானை

பிரி நாக்கன - பாம்பு

பின்கொடுக்கன் - தேழ்

போடிமார் - வயற் சொந்தக்காரர்கள்

மறி மாடுகள்.- சினைப்படுங் காலத்தில் கட்டற்று ஓ டித் திரியும் காளைகள்

மாட்டு இடாப்பு- கால்நடைபற்றய விபரப் பதிவு

மாட்டு வாகடம் - கால்நடை வைத்தியம் பற்றிய தமிழ் மருத்தவ நூல்

முல்லைக்காரன் - வயற்செய்கையில் அனுசரணை செய்பவன்

லடாய - பிணக்கு

வதனமார் - கால்நடை வளர்ப்பவர்கள் கைதொழும் காவற் தெய்வம்

வதனமார் சடங்கு - பட்டிகளில் பட்டியின் காவற் தெய்வத்திற்கு செய்யும் வழிபாடு

வரியுடலன் - புலி

வாடி - வயலின மத்தியில் அமைக்கப்படும் சிறு வீடு


விரிநாக்கன் - பாம்பு

வெளு - கால்நடை பிடிக்க உபயோகமாக இருக்கும் சுருக்குக் கயிறு

==================

# ஈழத்துப்பூராடனர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



* ஆசிரியராகப் பணி யாற்றி
இளைப்பாறியவர்,
*உயர் வகுப்பு ஆசிரியராகப்
பணிசெய்தாலும் பாலர் கீழ் பிரிவு,
மேற்பிரிவுகளில் எழுத்து எண்,
வாசிப்பு பாடங்களைக் கற்பித்து
"எழுத்தறிவித்தவன் இறைவன்".
என்ற ஆத்மதிருப்தியுடன் வாழ்ந்தவர்.
*எனினும் ஒரு பேராசிரியரின்
பணியிலும் சிறந்த பணியை
வீட்டிலிருந்துகொண்டே பல்லாயிரம
நூல்களைக் கொண்ட இலரது
நூலகத்தையும் ஓய்வு நேரத்தையும்
இலவசமாக உயர் வகுப்பு
மாணவர்களுக்கு நல்கினுர்.
*கனடாவிற் குடிபெயர்ந்து வாழ்பவர்.
*இவரும் இவரது மக்களும்
மின்கணனித் தமிழ் அச்சமைப்பை
முதன்முதலில் உலகில்
அறிமுகப்படுத்தியவர்.
*பல நூல்களின் படைப்பாளி.
*உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப்
பிரதித் தலைவராக இருந்தவர்.
*கனடாவில் உலகத் தமிழ்ப்
பண்பாட்டியக்கத்தின் கிளையை
ஆரம்பித்தவர்.
*தற்போது அதன் காப்பாளராக
இருக்கிறுர்.

**மு.நடேசானந்தம்**

நிழல் வெளியீடு - பாரிஸ்